



# அத்தியாயம் 1

## பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு, கொள்கைகள்

### 1.1 2006 இன் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உறுதிப்பாடு மற்றும் கொள்கை வழி முறைகள்

**இலங்கை 1978இற்குப் பின்னரான ஆகக் கூடிய 7.4 சதவீத வளர்ச்சியையும் முன்னெப்பொழுதும் இல்லாத ஆகக் குறைந்த தொழிலின்மை வீதமான 6.5 சதவீதத்தையும் பதிவு செய்து பொருளாதார விரிவாக்கப் பாதையில் தொடர்ந்து சென்று அதன் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய தாக்குப் பிடிக்கும் தன்மையை 2006இல் வெளிக்காட்டியது.** சாதகமான இவ்வபிவிருத்திகளுக்கு மத்தியிலும், தோற்றம் பெற்றுவரும் பணவீக்க அச்சுறுத்தல்கள் கொள்கை வகுப்போருக்கு கடுமையான சவாலை ஏற்படுத்தியது. எனவே, நாணயக் கொள்கையின் நடைமுறைப் படுத்தலானது அதிகரித்துச் செல்லும் பணவீக்க அழுத்தம் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்களைக் கட்டுப்படுத்துவதனை நோக்கி தொடர்ச்சியாக நெறிப்படுத்தப்பட்டது.


எனினும், விலை உறுதிப்பாட்டுக்கான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், நிதியியல் துறையின் ஆரோக்கியமான பண்பாக அதன் தொடர்ச்சியான விரிவாக்கம் விளங்கிய அதேவேளை சவால்களுக்கு தாக்குப் பிடிக்கும்வகையில் தொடர்ந்து ஆற்றல் பெற்று காணப்பட்டது.

**பொருளாதார விரிவாக்கம் பல பாரிய சவால்களுக்கு மத்தியில் அடையப்பட்டதால் பாராட்டப்படத்தக்கதாகும்.** அதிகூடிய பன்னாட்டு எண்ணெய் விலைகள், அதிகரித்த பயங்கரவாதச் செயற்பாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிரான அதிகரித்த நடவடிக்கைகள் வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் போன்ற இயற்கை அழிவுகள் சுனாமிக்குப் பின்னரான மீள் கட்டுமானத்தை விரைவுபடுத்த வேண்டிய தேவை, ஏற்றுமதிகளுக்கான தீவிர போட்டி என்பனவே பாரிய சவால்களாக விளங்கின. நாட்டின் தலைக்குரிய வருமானம் ஐ.அ.டொலர் 1,355இற்கு அதிகரித்தது. அதிகரித்த உலகளாவிய போட்டித்தன்மையுடன் ஏற்றுமதிகள் தொடர்ந்து வளர்ச்சியடைகையில் இறக்குமதிகள் பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவை மேலும் விரிவாக்குவதற்கு உதவும் வகையில் வளர்ச்சியடைந்தன. தொழிலாளர் பண அனுப்பல்களிலான முன்னெப்பொழுதுமில்லாத உயர் வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் அரசுக்கான வெளிநாட்டு நிதியிடல் என்பவற்றிலான முன்னெப்பொழுதுமில்லாத அதிகரித்த உட்பாய்ச்சல்கள் என்பன அதிகரித்து வரும் வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளை நிதியிட உதவியதுடன், 2006இல் நாட்டின் சென்மதி நிலுவையில் ஐ.அ.டொலர் 204 மில்லியன் கொண்ட மிகையை விளைவித்தன. இறைத் திரட்சிச் செயல்முறை அரசிறையிலான மேலதிக முன்னேற்றத்துடனும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசபடுகடனிலான வீழ்ச்சியுடனும் தொடர்ந்து செயற்பட்டிருக்கையில் பலதரப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மீதான உயர் அரச முதலீட்டுக்கும் வசதி செய்தது. இவ்வாண்டின் முற்பகுதியில் நிலவிய பணவீக்கத்தின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு முக்கியமாக உயர் நாணய விரிவாக்கம் காரணமாக ஏப்பிறலில் இருந்து அதிகரிக்கத் தொடங்கியது. நிருவகிக்கப்பட்ட விலைகளிலான மேல் நோக்கிய திருத்தமானது விலை மட்டங்களில் ஒருமுறை மட்டுமே அதிகரிப்பை ஏற்படுத்திய போதும் மேலதிக நாணய விரிவாக்கத்துக்கான வழிமுறைகளை மூடுவதன்மூலம் நீண்ட காலத்தில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உகந்ததாகக் காணப்பட்டது. இதேவேளை, இவ்வாண்டின் பிற்பகுதியில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகள் காரணமாக ஏற்பட்ட வழங்கலிலான இடையூறுகள் எதிர்க்கணிய வழங்கல் அதிர்வுகளை விளைவித்து விலைகள் மீது அழுத்தத்தை ஏற்படுத்தின. மதிநுட்பமான சில வழிமுறைகளால் அனுசரனையளிக்கப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகளின் தொடர்ச்சி கேள்வியால் உந்தப்பட்ட பணவீக்கத்தை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தியது. 2007 இறுதியளவில் தனி இலக்க மட்டத்திற்கு பணவீக்கத்தைக் குறைப்பதை நோக்காகக் கொண்டு 2007 சனவரியில் மத்திய வங்கி மேலும் பல வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. நிதியியற் சந்தைகளிலான மேலதிக விரிவாக்கமானது, விசேடமாக பங்கு மற்றும் வெளிநாட்டு செலாவணிச் சந்தைகளின் வர்த்தகம் செய்யப்பட்ட உயர் அளவுகளில் பிரதிபலிக்கப்பட்டது. நிதியியல் முறைமையின் தாக்குப் பிடிக்கும் திறனை அதிகரிப்பதற்கான சட்டவாக்கங்களின் அறிமுகம் மற்றும் மதிநுட்பமான ஒழுங்குவிதிகளை விரிவாக்கல் என்பவற்றுடன் நிதியியல் உட்கட்டமைப்பு 2006இல் மேலும் பலப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டது.


**குறைந்த பணவீக்கத்துடன் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய உயர் வளர்ச்சியை அடைவதற்கு உற்பத்தித் திறனிலான தொடர்ச்சியான மேம்பாடுகள் முக்கியமானதாகும்.** உற்பத்தித்திறன் மேம்பாட்டின் அடிப்படை காரணிகளாக உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள், மனித மூலதன அபிவிருத்திகள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகள் என்பன விளங்குகின்றன. நிறுவன மட்டத்தில் தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஊக்குவிப்பதற்கு இயலக் கூடிய சூழலை வழங்கும் அதே வேளை பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பை முன்னேற்ற வேண்டிய தேவையை இலங்கை கொண்டிருக்கிறது. சகல உற்பத்தித் துறைகளும் தீவிரமடைந்து வரும் பன்னாட்டுப் போட்டி பாதுகாப்பை வழங்குவதிலான மட்டுப்படுத்தல்கள் மற்றும் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்காக தொழிலாளர் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான தேவை என்பவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறான உற்பத்தித் திறன் மேம்பாடுகள் பன்னாட்டு போட்டித் தன்மையை அதிகரிக்கும் அதே வேளை பணவீக்கத்தைக் குறைப்பதற்கும், கூலி அதிகரிப்புக்களை ஈடு செய்வதற்கான மூலவளங்களை வழங்குவதற்கும் உதவும். விசேடமாக ஆசியாவின் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் உற்பத்தித்திறன் வளர்ச்சி குறைவாக இருப்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். கடந்த காலங்களில் உற்பத்தித் திறனில் கணிசமான மேம்பாடு இருந்திருக்குமாயின் இலங்கை குறைந்த பணவீக்க வீதத்தில் உயர்ந்த தலைக்குரிய வருமானத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும்.

**அரசின் கொள்கை ஆவணமான பத்தாண்டு கால அபிவிருத்தி கட்டமைப்பு 2006 - 2016 இல் (பத்து ஆண்டு தொலைநோக்கு) விதந்துரைக்கப்பட்டவாறு நடுத்தர காலத்தில் 8 சதவீதத்திற்கும் கூடுதலான நீடித்து நிலைத்திருக்கக் கூடிய உயர் வளர்ச்சியை பேணுவதற்கு தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

வரைபடம் 1.1 ஆண்டு வளர்ச்சியும் தொழில்வாய்ப்பின்மையும்




வரைபடம் 1.2 சேமிப்புக்களும் முதலீடும்



சிறப்புக் குறிப்பு 1

## 2007இலும் அதற்கு அப்பாலும் பணவீக்க அழுத்தங்களை கையாளுதல்

மத்திய வங்கி அதன் முக்கிய குறிக்கோள்களிலொன்றான பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுவது தொடர்பாக, உண்மையான வெளியீட்டின் வளர்ச்சிக்காக, பொருத்தமான மட்டத்தில் நாணய வளர்ச்சியினைப் பேணுவதன் மூலம் பணவீக்கமற்ற உயர் வளர்ச்சியை பெறும் விதத்தில் உபாயமொன்றினை வடிவமைத்து தற்பொழுது நடைமுறைப்படுத்தி வருகின்றது. 2007இலும் அதற்கு அப்பாலுக்குமான நாணயக் கொள்கை உபாயத்தினை வடிவமைத்த பொழுது உயர்ந்த நாணய விரிவாக்கமும் 2006இல் பணவீக்கத்தில் காணப்பட்ட திடீர் உயர்வும் பரிசீலனைக்கெடுக்கப்பட வேண்டிய இரு காரணிகளாக விளங்கின. **அட்டவணை சி 1.1 எதிர்பார்க்கப்பட்ட கால முடிவுப்பெறுமதியின் அடிப்படையில் காலாண்டு ஒதுக்குப் பணத்தின் இலக்குகளைக் காட்டுகின்றது. கால முடிவுப்பெறுமதிகளின் மீது நாணய இலக்குகளை ஏற்படுத்துவது வழமையானதாக இருந்த போதும், நீண்ட வார இறுதியில் ஒதுக்கு வாரத்தின் இறுதி நாளன்று உண்மையான ஒதுக்குப் பணத்திலிருந்து விலகுதல், என்பனவற்றினால் உருவாகின்ற பாரிய நாளாந்த தளம்பல்களின் காரணமாக கால முடிவு அளவுகள் சிலவேளைகளில் பிழையாக வழிநடத்தப்படக்கூடும். ஆகவே, நாணய கொள்கை வழிமுறை முறைகளின் செயலாற்றத்தினை மதிப்பிடுகின்ற நோக்கத்திற்காக பணவீக்கமானது மாதாந்த சாரசரியுடனும் நெருக்கமாக ஒன்றிலொன்று தங்கியுள்ளதனால் உண்மையான மாதாந்த சராசரிகளுக்கெதிரான இலக்குகளை ஒப்பிடுவது மிகப் பயனுள்ளதாக இருக்கும்.**

நடுத்தர காலத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட நாணய நிகழ்ச்சித்திட்டம் நடுத்தர காலத்தில் அரசாங்கத்தின் இலக்கிடப்பட்ட உயர் வளர்ச்சிப் பாதையினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆகவே, இது, இக்காலப் பகுதியில் பணவீக்கத்தினைக் குறைத்து தாழ்ந்ததும் உறுதியானதுமான மட்டத்தில் பேணுவதற்கு பண நிரம்பலின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்துவதனை தேவைப்படுத்துகின்றது. இதன்படி, நீண்டகாலக் கொள்கையொன்றாக அடுத்த 10 ஆண்டு காலப்பகுதிக்குள் 4 சதவீத மட்டத்திற்கு படிப்படியாக வீழ்ச்சியடையும் விதத்தில் பணவீக்கம் இலக்கிடப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்தின் பத்தாண்டு தொலை நோக்குடன் ஒத்துச் செல்லுமொன்றாகும்.

பொதுமக்களுக்கு முன்கூட்டியே தகவல்களை வழங்குவதனைப் பேணும் விதத்தில், கொள்கை தீர்மானங்கள் மற்றும் வெளிப்படையான தன்மையினை அதிகரிக்கும் குறிக்கோளுடன் மத்திய வங்கி 2007 சனவரி 2ஆம் நாளன்று '2007ஆம் ஆண்டிற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகளுக்கான வழிகாட்டல்களை' அறிவித்தது[1]. இது 2006ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகள் மற்றும் நாணய, நிதியியல்துறைக் கொள்கைகளை நடத்துதல், 2007இல் நாணயக்கொள்கை குறிக்கோள்களையும் நிதியியல் உறுதிப்பாட்டினையும் பூர்த்தி செய்வதில் காணப்பட்ட அறைகூவல்கள் 2007இலும் அதற்கு அப்பாலுக்குமான மத்திய வங்கியின் நாணயக்கொள்கை உபாயத்தின் விபரமான அம்சங்கள், 2007இலும் அதற்கு அப்பாலுக்குமான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கான கொள்கைகள் மற்றும் பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கான கொள்கைகள் என்பனவற்றை எடுத்துக் காட்டுகின்றது.

வழிகாட்டல்களில் எடுத்துக்காட்டப்பட்டவாறு 2007இல் நாணய இலக்குகளை எய்துவதற்கு பொருளாதாரத்தின் ஏனைய துறைகளின் அதாவது உண்மை, வெளிநாடு, இறை மற்றும் நாணயத்துறைகளின் அபிவிருத்திகளைக் காட்டுகின்ற மற்றைய முக்கிய பேரண்டப் பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதன் மூலம் வசதிப்படுத்தப்படுவது அவசியமானதாகும். எனவே, 2007இல் இவ்விலக்குகளை அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் இத்துறைகளிலுள்ள முக்கிய பேரண்ட மாறிகளின் கண்காணிப்பு பொறிமுறையொன்று தொடங்கப்பட்டிருக்கிறது. முக்கியமான மாறிகளும் அவற்றின் இலக்குகளும் அட்டவணை சி. 1.2 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை சி 1.1**
**ஒதுக்குப் பணத்திற்கான காலாண்டு இலக்குகள்**


| | 2006 உண்மையான | 2007 இலக்குகள் | | | |
|---|---|---|---|---|---|
| | திசெ. | மார். | சன. | செத். | திசெ |
| ஒதுக்குப் பணம் (ரூ. பில்லியன்) | 239.8 | 254.6 | 250.4 | 257.8 | 267.6 |
| புள்ளிக்குப் புள்ளி மாற்றம் (மாத முடிவில்) | 21.1 | 17.3 | 17.9 | 16.1 | 11.6 |

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளிலிருந்து விலகிச் செய்வதனைக் குறைப்பதற்கும், குறிப்பிடத்தக்க விலகல்கள் ஏதுமிருப்பின் அவற்றைத் தவிர்ப்பதற்கு நேரகாலத்துடன் கொள்கை வழிமுறைகளை மேற்கொள்வதற்குமாக மாதாந்த அடிப்படையில் இம்மாறிகளைக் கண்காணிப்பதற்காக அரசாங்கமும் மத்திய வங்கியும் ஏற்கனவே பொறிமுறையொன்றினை நிறுவியுள்ளன.

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளிலிருந்து விலகிச் செல்வதனைக் குறைப்பதற்கும் குறிப்பிடத்தக்க விலகல்கள் ஏதுமிருப்பின் அவற்றைத் தவிர்ப்பதற்கு நேரகாலத்துடன் கொள்கை வழமுறைகளை மேற்கொள்வதற்குமாக மாதாந்த அடிப்படையில் மாறிகளை கண்காணிப்பதற்காக அரசாங்கமும் மத்திய வங்கியும் ஏற்கனவே பொறிமுறையொன்றை நிறுவியுள்ளன.

நாணயக்கொள்கைத் தீர்மானங்களை மேம்படுத்துவதில் முன்னேற்றங்கள் அடையும் மேலுமொரு நடவடிக்கையாக, தனியார்துறையினை பிரதிநிதித்துவப்படுத்தும் 7 பங்குடமையாளர்களையும் பொருளியலாளர்களையும் உள்ளடக்கிய நாணயக்கொள்கை ஆலோசனைக்குழுவொன்று 2007இன் சனவரி 2ஆம் நாளன்று வழிகாட்டலில் அறிவிக்கப்பட்டவாறு நிறுவப்பட்டது. நாணயக்கொள்கை மற்றும் நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகள் தனியார்துறை உறுப்பினர்களின் நிபுணத்துவம் மற்றும் திறமையின் மூலம் மேலும் வலிமைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தனியார் துறை உறுப்பினர்கள் வங்கியின்

**முதன்மைப் பணவீக்க எதிர்வுகூறல்**
**2007-2008**




[1] முழுஅறிக்கையும் மத்திய வங்கியின் வெப்தளமான www.cbsl.lk இல் வெளியிடப்பட்டிருக்கிறது.

1

பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு, கொள்கைகள்

**சிறப்புக் குறிப்பு 1 (தொடர்ச்சி)**

## 2007இலும் அதற்கு அப்பாலும் பணவீக்க அழுத்தங்களை கையாளுதல்

**அட்டவணை சி 1.2**
**கண்காணிப்புப் பொறிமுறையில் முக்கிய மாறிகள்**

| | |
|---|---|
| 1. | இ.ம.வங்கியின் தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் |
| 2. | அரச அரசிறை |
| 3. | அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினம் |
| 4. | அரசிற்கான ஆரம்ப இறை மீதி |
| 5. | அரச வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை முறையின் தேறிய உள்நாட்டு நிதியிடல் |
| 6. | இ.ம. வங்கியின் ஒதுக்குப் பணம் |
| 7. | மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களிலுள்ள திறைசேரி உண்டியல் உடமைகள் |
| 8. | அரசின் மீதான வங்கியின் தேறிய கோரல்கள் |
| 9. | வங்கித்தொழில் முறைமையினால் அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் |

பொதுவான நாணயக்கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்குமிகப் பயன்மிக்க திறமைகளை வழங்க முடியும். ஐ. அமெரிக்க பெடரல் றிசேர்வும் நாணய கொள்கை நோக்கங்களுக்காக 2007 சனவரி 17ஆம் நாளன்று இதையொத்த குழுவொன்றின் நியமனம் பற்றி அறிவித்துள்ளது[2].

இவ்வனைத்துப் பங்குடமையாளர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட கூட்டு மற்றும் இணைந்த முயற்சிகள், வலுவான உயர்ந்த பொருளாதார வளர்ச்சியுடன் சேர்ந்து இனிவரும் ஆண்டுகளில் தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தினை எய்துவதனை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது. 2007இலும் 2008இலும் முதன்மை பணவீக்கம் மற்றும் மையப் பணவீக்கம் என்பனவற்றின் எதிர்பார்க்கப்படும் பாதையினை கீழேயுள்ள வரைபடம் சி.1.1 காட்டுகின்றது.

[2] "நாணயக் கொள்கை பற்றிய புதிய மன்றில் மத்திய வங்கியாளர்கள் மற்றும் பொருளியலாளர்கள் சந்திக்கவிருக்கின்றனர்" 2007 சனவரி 17ஆம் நாளின் Wall Street Journal

பத்து ஆண்டு தொலை நோக்கமானது பொதுவான கொள்கைத் தொலை நோக்கான *'மகிந்த சிந்தனை'* உடன் இணங்கிச் செல்லும் வகையில் பொருளாதாரத்தின் சகல பங்குடைமையாளர்களுடனான தீவிர ஆலோசனைச் செயல்முறையினூடாக தயாரிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் தொழில் முயற்சியாளர்களுக்கு தேவையான உதவியை வழங்குதல் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல் என்பவற்றின் மூலம் சந்தையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகளின் சாதகமான பண்புகளுடன் அபிலாசைகளை ஒருங்கிணைப்பதற்காக இப் பொதுவான கொள்கை உத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது. நீடித்து நிலைத்திருக்கக் கூடிய மற்றும் பரந்த அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சியை அடைவதில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதற்கான தேவையை இனங்கண்டு பத்து ஆண்டு தொலைநோக்கு குறைவானதும் உறுதியானதுமான 4 சதவீத பணவீக்கத்துக்கும், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை 4 சதவீதத்துக்கு கீழ் வைத்திருத்தல் மற்றும் 2016 அளவில் பொதுப்படுகடனை மொ.உ.உற்பத்தியின் 50 சதவீதமளவிற்கு குறைத்தல் என்பனவற்றின் மூலம் இறைத் திரட்சிக்கும் இலக்கிடுகிறது. கொள்கை உபாயத்தின் முக்கிய நோக்காக வலு, தொலைத் தொடர்பூட்டல் பணிகள், குடிநீர் மற்றும் பாசன நீர், வீதிகள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் மற்றும் நலம் மற்றும் கல்விப் பணிகள் போன்றவற்றின் தொடர்ச்சியான வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக, நடைமுறையிலிருக்கும் உட்கட்டமைப்பு மற்றும் பணிகளுக்கான தடைகளுக்கு தீர்வு காண்பதற்காக பெருமளவு முதலீட்டை இவற்றுக்கும் வழங்குவதன் மூலம் நாட்டின் உள்ளார்ந்த வளர்ச்சியை தூண்டிவிடுவதாக விளங்குகிறது. பன்னாட்டு அபிவிருத்தி பங்காளர்கள் உள்ளடங்கலாக சகல பங்குடைமையாளும் 10 ஆண்டு தொலைநோக்கை ஏற்று அங்கீகரித்து அநேகமாக திட்டமிடப்பட்ட சகல உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்கும் தேவையான நிதி உதவியையும் வழங்குவதற்கு அவர்களின் கடப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன.

**குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் திட்டமிடப்பட்ட உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களினை நடைமுறைப்படுத்தல் உயர் வளர்ச்சியை எய்துவதற்கான முற்தேவையாகும்.** கடந்த காலங்களில், உள்ளார்ந்த வளமிக்க வளர்ச்சியைவிட குறைந்தளவிலான வளர்ச்சியை எய்துவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலான தாமதம், விளங்குகின்றது. புதிய கொள்கை உபாயம், நடைமுறைப்படுத்தல், பிரச்சனைகளை எடுத்தியம்புவதில் கூடிய முக்கியத்துவம் அளிப்பது ஊக்கமளிக்கின்றது. உட்கட்டமைப்பு அபிவிருத்திகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகளை அடையும் பொருட்டு பிரதான உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்தலை உறுதிப்படுத்துவதற்கு அவ்வாறான முயற்சிகள் தொடர்ந்து இடம்பெறுவது அத்தியாவசியமாகும்.

**பத்து ஆண்டு தொலை நோக்கில் கூறப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கு அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் தொழிற்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அத்தியாவசியமானதாகும்.** உபாய ரீதியில் முக்கியத்துவம் பல பணிகளின் முகாமைத்துவத்துக்கு அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் பொறுப்பாக விளங்குகின்றன. அவையாவன இலங்கை மின் சபையால் வழங்கப்படும் மின்வலு இலங்கை புகையிரதப்பகுதியால் வழங்கப்படும் புகையிரதப் பணிகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் வழங்கப்படும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புப் பணிகள், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படும் 80 சதவீதத்திற்கும் கூடுதலான பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதியும் (நாட்டின் இறக்குமதிகளின் 20 சதவீதத்திற்கும் அதிகமானவை) பகிர்ந்தளிப்பும் இரண்டு அரச வாத்தக வங்கிகளால் மேற்கொள்ளப்படும் 50 சதவீதத்திற்கும் கூடுதலான வங்கித் தொழில் பணிகள், இலங்கை போக்குவரத்துச் சபையால் மேற்கொள்ளப்படும் 30 சதவீதமான பேரூந்துப் போக்குவரத்து என்பனவாகும். இப்பின்னணியில் அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் எதிர்காலத்தில் வினைத்திறன் மிக்கதும் குறைந்த செலவுடையதுமான உட்கட்டமைப்பை உறுதிப்படுத்தும் அதே வேளை பொது மக்களுக்கான அவற்றின் பணிகளின் முன்னேற்றங்களில் கவனம் செலுத்தாது அப்பணிகளை வழங்குவதில் ஏகபோக உரிமையை அல்லது பெருமளவு சந்தைப் பங்குகளை தொடர்ந்து அனுபவிப்பதற்கான தனியார் மயப்படுத்தப்படாது என அரசால் வழங்கிய உறுதி மொழியை ஒரு கவசமாகக் கருதக்கூடாது. தனியார் மயப்படுத்தப்படாதென்ற கொள்கையானது வரி செலுத்துவோர் மீது சுமையை ஏற்படுத்தாது பொதுமக்களுக்கு நல்ல தரமான பணிகளை வழங்கும் அதே வேளை அரசுக்கு நியாயமான இலாபத்தை உருவாக்கக்கூடிய வினைத் திறனுடன் தொழிற்படுவதற்கு இத் தொழில் முயற்சிகள் மீது கடுமையான கடப்பாட்டை விதிக்கிறது. அவ்வாறான பணிகளை பன்னாட்டு ரீதியிலான

போட்டி அடிப்படையில் வழங்குவது பொருட்கள் மற்றும் பணிகளை ஏற்றுமதி செய்வதில் பன்னாட்டுச் சந்தைகளில் போட்டியிடும் அதன் ஆற்றலில் பெருமளவு தங்கியிருக்கும் இலங்கை போன்ற சிறிய திறந்த பொருளாதாரம் உயர் வளர்ச்சி வீதங்களை அடைவதற்கு முற்தேவையாக விளங்குகிறது. பத்து ஆண்டு தொலை நோக்கு இப் பணிகளின் முக்கியத்துவத்தை தெளிவாக இனங்கண்டு, அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளால் முகாமைப்படுத்தப்படும் உட்கட்டமைப்பை விரிவாக்குவதற்கு அரச முதலீட்டின் பெருமளவை ஒதுக்கீடு செய்தமை உற்சாகப்படுத்துகின்ற விடயமாகும். அரசுக்குச் சொந்தமான இத்தொழில் முயற்சிகளின் உரிமையாளராக விளங்கும், அரசானது இவற்றை முகாமைப்படுத்துவதற்கு நியமிக்கப்பட்ட முகவர்கள் அல்லது சபைகள் என்பவற்றில் தங்கியிருக்க வேண்டியிருக்கிறது. எனவே, அம்முகவர்கள் அமைப்பு ரீதியான அல்லது தனிப்பட்ட அநுகூலங்களில் கவனம் செலுத்துவதிலும் பார்க்க நாட்டிற்கு அநுகூலங்களை தோற்றுவிக்கும் வகையில் அவர்களது பொறுப்புக்களை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு ஒரு பொறிமுறை அவசியமானதாகும். எனவே, முதலீடு மீது போதியளவு இலாபத்தை உருவாக்குவதற்கு அரசு இத் தொழில் முயற்சிகளின் வெளிப்படையான கட்டுப்பாடுகளை பெறுவதும் மற்றும் அவ்வாறான பாரிய முதலீடுகளிலிருந்து எதிர்கால காசுப் பாய்ச்சலின் நியாயமான அளவை உறுதிப்படுத்துவதும் அத்தியாவசியமாகிறது. அவ்வாறான கடப்பாடு இல்லாமை இறை மற்றும் படுகடனை தாங்கக்கூடிய தன்மையை மோசமாக்கி, அதன் மூலம் பத்து ஆண்டு தொலை நோக்கில் குறித்துரைக்கப்பட்டுள்ள பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை ஆபத்துக்குள்ளாக்கலாம்.

**சகல துறைகளும் செழிப்பான வீதங்களில் வளர்ச்சியடைந்தமையால் 2006இல் பொருளாதார விரிவாக்கம் பரந்த அடிப்படையில் காணப்பட்டது.** வேளாண்மைத்துறை 4.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து மொத்த வளர்ச்சிக்கு 11.1 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்திருக்கையில், கைத்தொழிற்துறை 7.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து மொத்த வளர்ச்சிக்கு 27 சதவீதத்தைப் பங்களிப்புச்செய்தது. இவ்வாண்டில் பணிகள்துறை 8.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தமையால் இத்துறையின் பங்களிப்பு அதிகூடிய வீதமான 62.6 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

**சாதகமான வானிலையுடன் அரச மற்றும் தனியார் துறைகளுக் கிடையிலான பலமடைந்த உறவு காரணமாக நன்மையடைந்த, வேளாண்மைத்துறை 2006இல் அதன் மீட்சியைத் தொடர்ந்தது.** மழைத்தடைகளின் பயன்பாடு, சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் பசுமை இல்லங்கள் போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றியமை நில மற்றும் நீர் மூலவளங்களின் உச்சப்பயன்பாடு, விதை மற்றும் வளமாக்கி போன்ற உள்ளீடுகளை உதவு தொகை விலைகளில் கிடைக்கக் கூடியதாக ஏற்பாடு செய்தமை, வேளாண்மைச் செயற்பாடுகளுக்கான கொடுகடன் வசதிகளின் ஏற்பாடு, வேளாண்மை சார்ந்த செயற்பாடுகளுக்குத் தேவைப்பட்ட நவீன பொறி மற்றும் கருவிகளின் இறக்குமதிக்கான வரிச்சலுகைகளின் ஏற்பாடு என்பன இம்மீட்சிக்குப் பங்களிப்புச் செய்தன. மேலும் விலங்கு வளர்ப்புத்துறை அதிகரித்த தனியார் துறை செயற்பாடுகள் மற்றும் பண்ணை வேளாண்மையாளர்களுக்கான வலுவளிக்கும் செயற்றிட்டம் உள்ளடங்கலாக அரசால் வழங்கப்பட்ட பலவிதமான ஊக்குவிப்புக்களாலும், உதவியாலும் சிறப்பாகச் செயலாற்றியது. சோளம், பெரிய வெங்காயம் மற்றும் சோயா அவரை போன்ற ஏனைய களப்பயிர்களின் உற்பத்தி, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் ஊக்கமளிப்பால் நன்மையடைந்து 2006இல் பெருமளவு அதிகரிப்பைப் பதிவு செய்தது. அறுவடைக்குப் பின்பான கையாளல், இணைப்புக்கள் மற்றும் அகன்ற வாயையுடைய பிளாத்திக்குப் பாத்திரங்கள், வேளாண்மையாளர்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனை என்பவற்றை வழங்கி சந்தைப்படுத்தல் வசதிகளை அதிகரித்தமையும் வேளாண்மை உற்பத்தியை அதகரிக்க உதவின. 2006இல் நெல் உற்பத்தி, சாதகமான வானிலை மற்றும் உதவுதொகை அளிக்கப்பட்ட வளமாக்கியால் நன்மையடைந்து 3.3 மில்லியன் மெற்றிக் தொன் கொண்ட புதிய உச்ச மட்டத்தை அடைந்தது. எனினும் அரசால் வழிநடத்தப்பட்ட நெல் கொள்வனவுத் திட்டம் பல இடையூறுகளை எதிர் கொண்டதால் வேளாண்மையாளர்கள் தொடர்ந்தும் சந்தைப்படுத்தல் பிரச்சனைகளை எதிர் கொண்டனர். இறப்பர் உற்பத்தி கவர்ச்சிகரமான விலைகள் மற்றும்

**அட்டவணை 1.1**

**நிலையான விலைகளில் (1996) மொத்தத் தேசிய உற்பத்தி**

| துறை | பெறுமதி (ரூ.மில்லியன்) | | மொ.உ.உ.வின் பங்கின் (%) | | வீத மாற்றம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2005(அ) | 2006(ஆ) | 2005(அ) | 2006(ஆ) | 2005(அ) | 2006(ஆ) | 2005(அ) | 2006(ஆ) |
| **வேளாண்மைத்துறை** | **179,278** | **187,729** | **17.2** | **16.8** | **1.9** | **4.7** | **5.8** | **11.1** |
| வேளாண்மை | 148,712 | 149,506 | 14.3 | 13.4 | 9.4 | 0.5 | 21.6 | 1.0 |
| காட்டுத்தொழில் | 17,400 | 18,253 | 1.7 | 1.6 | 1.7 | 4.9 | 0.5 | 1.1 |
| மீன்பிடித் தொழில் | 13,166 | 19,970 | 1.3 | 1.8 | -42.2 | 51.7 | -16.3 | 8.9 |
| **கைத்தொழில்துறை** | 280,868 | 300,982 | 27.0 | 27.0 | 8.3 | 7.2 | 36.6 | 26.3 |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 19,334 | 20,888 | 1.9 | 1.9 | 14.1 | 8.0 | 4.0 | 2.0 |
| தயாரிப்பு | 169,336 | 178,359 | 16.3 | 16.0 | 6.0 | 5.3 | 16.3 | 11.8 |
| மின்வலு, நீர் | 17,784 | 21,368 | 1.7 | 1.9 | 24.5 | 20.2 | 5.9 | 4.7 |
| கட்டவாக்கம் | 74,414 | 80,367 | 7.2 | 7.2 | 8.9 | 8.0 | 10.3 | 7.8 |
| **பணிகள் துறைகள்** | 579,618 | 627,504 | 55.7 | 56.2 | 6.2 | 8.3 | 57.6 | 62.6 |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும் | 225,103 | 238,322 | 21.6 | 21.4 | 2.8 | 5.9 | 10.3 | 17.3 |
| போக்குவரத்து களஞ்சியப்படுத்தல மற்றும் தொடர்பூட்டல் | 159,484 | 180,307 | 15.3 | 16.2 | 11.7 | 13.1 | 28.4 | 27.2 |
| நிதியியல் பணிகள், உண்மைச்சொத்து மற்றும் வியாபாரப் பணிகள் | 122,127 | 133,958 | 11.7 | 12.0 | 6.5 | 9.7 | 12.6 | 15.5 |
| பொதுநிருவாகம், ஏனைய அரசபணிகள், பாதுகாப்பும் ஏனைய சமுதாய, சமூக தனியாள் பணிகள் | 72,903 | 74,918 | 7.0 | 6.7 | 5.4 | 2.8 | 6.4 | 2.6 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | 1,039,763 | 1,116,215 | 100.0 | 100.0 | 6.0 | 7.4 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறியகாரணி வருவாய் | -16,526 | -21,666 | | | -46.2 | -31.1 | | |
| **மொத்த தேசிய உற்பத்தி** | 1,023,237 | 1,094,550 | | | 5.6 | 7.0 | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உற்பத்தித்திறன் மேம்பாடுகளின் காரணமாக 1996இற்குப் பின்பு அதிஉயர் உற்பத்தி மட்டத்தைப் பதிவு செய்தது. மீன் உற்பத்தி சுனாமியால் பாதிப்புக்குள்ளான இடையூறிலிருந்து தொடர்ந்து மீட்சியடைந்தது. எனினும், சில சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட தொழிலாளர் அமைதியின்மை இவ்வாண்டில் தேயிலை உற்பத்தி சிறிதளவால் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது.

**வேளாண்மையில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சிக்கு, உற்பத்தித்திறன் அதிகரிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் அது தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை வசதிப்படுத்தல், நிலையான வர்த்தகக் கொள்கைகளைப் பின்பற்றல், கிராமிய நிதியிடலை வழங்கல் பயிர்கள் மற்றும் கால் நடைகளை ஒருங்கிணைத்தல் என்பன தேவைப்படுகின்றன.** வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை மேலும் அபிவிருத்தி செய்வதனூடாக உற்பத்தித்திறன் அதிகரிப்பை வலுப்படுத்த முடியும். புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் உச்ச பயனைப் பெற்றுக் கொள்வதற்கு ஆராய்ச்சியாளர்கள், விரிவாக்கப் பணிகளை மேலும் அபிவிருத்தி செய்வதனூடாக உற்பத்தித்திறன் அதிகரிப்பைப் பயன்படுத்த முடியும். புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் உச்சப் பயனைப் பெற்றுக் கொள்வதற்கு ஆராய்ச்சியாளர்கள், விரிவாக்கப் பணி வழங்குவோர், முறைசார் கம்பனித்துறை மற்றும் வேளாண்மையாளர்களுக்கிடையே நெருங்கிய ஒத்துழைப்பு அத்தியாவசியமாகும். வேளாண்மையாளர்களுக்கு சிறந்த முறையில் அறிவூட்டுவதற்கு தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சுற்றாடல் தகவலுக்கான வலுவான உபாயம் தேவைப்படுகிறது. அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தல் வேளாண்மையாளர்கள், இடையீட்டாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு நன்மையளிக்கும், பெறுமதி கூட்டலுக்கு ஊக்குவித்தல் மற்றும் ஊக்குவிப்பு வழங்கல் வேளாண்மைப் பொருள் பதனிடும் கைத்தொழில்களில் வேலைவாய்ப்பை உருவாக்க உதவும். அரசு வேளாண்மை உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு அதிகார சபையொன்றை ஏற்கனவே நிறுவியுள்ளது. எனினும் அறுவடைக் காலப்பகுதியில் நெல், பலவகை மரக்கறிகள் மற்றும் துணை உணவுப் பயிர்களின் பண்ணை மட்ட விலைகளில் காணப்படும் உறுதியான வீழ்ச்சி சந்தைப்படுத்தல் பொறிமுறை போதாமல் இருப்பதை எடுத்துக் காட்டுகிறது. முன்நோக்கிய கொள்வனவு ஒழுங்கு முறைகளை மேம்படுத்துவதனூடாக வேளாண்மையாளர் அமைப்புக்களைப் பயன்படுத்தல் மற்றும் தனியார் அரச பங்குடைமைகளை அதிகரித்தல் என்பவற்றினூடாக வேளாண்மை உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்.

**வேளாண்மையாளரின் வருமானத்தை அதிகரிப்பதை நோக்காகக் கொண்ட கொள்கை முன்னெடுப்புக்கள் உதவுதொகை வழங்குவதைவிட கூடிய நன்மையை ஏற்படுத்தும்.** சந்தை விலைகளில் சார்பு ரீதியில் குறைவான பெறுமதி கூட்டலைக் கொண்ட நெல் போன்ற உற்பத்திகளுக்கு தொடர்ச்சியாக உதவுதொகை வழங்குவதும் அவ்வாறான பயிர்கள் இவ்வாறு செய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட இயலளவையே கொண்டிருப்பதால் வேளாண்மையாளரின் வருமானத்தில் நீண்டகால அதிகரிப்பை உறுதிப்படுத்தமாட்டாது. மேலும் அவ்வாறான கொள்கைகள் காலத்தின் தேவையான பயிர் பன்முகப்படுத்தலுக்கும் இடையூறு ஏற்படுத்தக் கூடும். பெறுமதி கூட்டல் மிகவும் குறைந்தளவில் காணப்படும் பயிர்களுக்காக வேளாண்மையாளர்களுக்கு உதவுதொகை வழங்குவதைவிட கூடிய இலாபகரமான உயர் பெறுமதி கூட்டலைக் கொண்ட பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பை மேற்கொள்வதற்கு வேளாண்மையாளர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் காணி மற்றும் நீர் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களிலிருந்து ஆகக் கூடிய நன்மைகளை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திகளுக்கான அதிகரித்தச் செல்லும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கேள்வியிலிருந்து கைத்தொழில்துறை நன்மையடைந்தது.** இவ் வளர்ச்சியானது முக்கியமாக புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள், உணவு, குடிபானங்கள் மற்றும் உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள், வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகளில் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் சிறந்த செயலாற்றத்தால் உந்தப்பட்ட கட்டடவாக்கத்துறையின் உயர் வளர்ச்சி, தொலை தொடர்பூட்டல் , வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்திகள், சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள், மின்வலு உருவாக்கம் மற்றும் சுனாமியின் மீள்கட்டுமானச் செயற்பாடுகள் தொடர்ந்தமை என்பவற்றிலிருந்து ஏற்பட்டது. கட்டடவாக்கத்துறையின் வளர்ச்சி சீமெந்து, மட்பாண்டம் மற்றும் கட்டடப் பொருட்கள் உள்ளடங்கலான உலோகமல்லாக் கனிப் பொருட்களின் உயர் வளர்ச்சியிலிருந்து புலப்படுகிறது. 2006இன் ஏற்றுமதிச் சந்தையில் பட்டை தீட்டப்பட்ட வைரங்கள், இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழிலும் சிறப்பாகச் செயலாற்றியது. 2006 இல் கைத்தொழில் துறையின் மீளமைப்பானது குறைந்த செலவுடனான தொழிலாளர் உற்பத்தித்திறன், உற்பத்திச் சிறப்பியல்பு, கையேற்புகளும் இணைப்புக்களும், செய்முறை மேம்பாடுகள், தொழில்நுட்ப அபிவிருத்திகள், உபாயமுள்ள கூட்டுக்கள், துணை உற்பத்தி வழங்கல்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தும் இயலளவுகளை மேம்படுத்தல் என்பவற்றினூடாக மேற்கொள்ளப்பட்டது.

**கைத்தொழில் துறையிலான நீடித்து நிலைத்திருக்கக் கூடிய நீண்ட கால வளர்ச்சிக்கு, தொழிலாளர்களை கூடுதலாகப் பயன்படுத்தும் கைத்தொழில்களில் இலங்கையின் அநுகூலங்கள் ஒப்பீட்டளவில் வீழ்ச்சியடைந்து செல்வதால், உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மை வாய்ந்ததாகவும், இயக்க ஆற்றல் உள்ளதாகவும் மற்றும் தொழில்நுட்ப ரீதியில் நுணுக்கமானதாகவும் இத்துறை தன்னைத்தானே மாற்றிக்கொள்ளும் தேவை காணப்படுகின்றது.** எனவே, கைத்தொழிற் துறையில் மேலும் பன்முகப்படுத்தலையும் உற்பத்தித்திறன் மேம்பாடுகளையும் மேற்கொள்வது உலகளாவிய சந்தையில் தீவிர போட்டியை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு அத்தியாவசியமாகிறது. அண்மைக் காலத்தில் தொழிற்சாலைக் கைத்தொழினுள் மிகப் பெரிய துணைத்துறையான புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் ஏற்றுமதிவகைகள் பல்புடை நூழிலை ஒழுங்குமுறை முடிவுக்கு வந்த பின்பு, உலக சந்தையில், முக்கியமாக, ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் கடும்போட்டியை எதிர்கொண்டது. எனினும், புடவைகள் மற்றும் ஆடைகள் துறை சிறப்பியல்பாக்கம் மற்றும் உற்பத்தித் திறன் பயன்களினூடாக இப்போட்டிக்கு வெற்றிகரமாக தாக்குப் பிடித்தது. உண்மையாதெனில், இத்துறையில் முதலீட்டாளர் நம்பகத் தன்மையைப் பிரதிபலிக்கும் புதிய வெளிநாட்டு முதலீட்டை புடவை மற்றும் ஆடைத்துறை தற்போதும் ஈர்த்துக் கொள்கிறது என்பதேயாகும். பணிகள் துறையால் வழங்கப்பட்ட ஆகக் கூடிய பங்களிப்பிற்கு தொலைத் தொடர்பூட்டல், சரக்குக் கையாளல் மற்றும் நிதியியற் பணிகளின் ஆரோக்கியமான விரிவாக்கம் பக்கபலமாக அமைந்திருந்தது. இத்துறைகளிலான தொடர்ச்சியான விரைந்த வளர்ச்சி உட்கட்டமைப்பு அமைப்புக்களின் நன்மைகளையும், உரிய ஒழுங்குமுறைப்படுத்தல் பொறிமுறைகளின் காரணமாக ஏற்பட்ட தாராளமயப்படுத்தலையும் பிரதிபலிக்கின்றது.

**நடுத்தர காலத்தில் 8-10 சதவீத வளர்ச்சி வீதத்தை அடைவதும், உலகமயமாக்கப்பட்ட கைத்தொழில், வர்த்தகம் மற்றும் வியாபாரத்தின் தேவைகளை வழங்கும் விரைவாக வளர்ச்சியடைந்து வரும் பணிகள் துறையை நிறுவுவதில் முக்கியமாகத் தங்கியுள்ளது.** பணிகள்துறை நடுத்தர காலத்தில் கிட்டத்தட்ட 10 -12 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப் படுவதால், இது பத்து ஆண்டு தொலைநோக்கில் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை கூடியளவு கல்வியறிவு வீதம் மற்றும் இலகுவாக பயிற்சியளிக்கக்கூடிய தொழிற்படையைக் கொண்டிருப்பதனால், இலங்கை, பணிகள்துறையை முன்னேற்றுவதற்கு சார்புரீதியில் அநுகூலமான நிலைமையைக்

**அட்டவணை 1.2** **கூட்டுக் கேள்வியும் சேமிப்பு முதலீட்டு இடைவெளியும் 2005 - 2006**

| விடயம் | ரூபா பில்லியன் | | வளர்ச்சி % | | மொ.உ..வின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2005 (a) | 2006 (b) | 2005 (a) | 2006 (b) | 2005 (a) | 2006 (b) |
| 1. உள்நாட்டுக்கேள்வி | 2,584.5 | 3,125.2 | 16.8 | 20.9 | 109.3 | 111.5 |
| 1.1 நுகர்வு | 1,957.0 | 2,321.9 | 14.8 | 18.6 | 82.7 | 82.9 |
| தனியார் | 1,761.9 | 2,068.5 | 14.4 | 17.4 | 74.5 | 73.8 |
| அரசு | 195.1 | 253.4 | 18.3 | 29.9 | 8.2 | 9.0 |
| 1.2 முதலீடு (மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்) | 627.5 | 803.4 | 23.5 | 28.0 | 26.5 | 28.7 |
| தனியார் | 465.3 | 632.7 | 15.3 | 36.0 | 19.7 | 22.6 |
| அரச கூட்டுத்தாபனங்கள் | 62.9 | 62.9 | 6.1 | 0.0 | 2.7 | 2.2 |
| அரசு | 99.3 | 107.8 | 119.2 | 8.5 | 4.2 | 3.8 |
| 2. தேறிய வெளிநாட்டுக்கேள்வி | -218.9 | -323.4 | -18.7 | -47.7 | -9.3 | -11.5 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 792.7 | 885.9 | 7.6 | 11.8 | 33.5 | 31.6 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 1,011.6 | 1,209.4 | 9.8 | 19.6 | 42.8 | 43.2 |
| 3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ) (1) + (2) | 2,365.6 | 2,801.8 | 16.6 | 18.4 | 100.0 | 100.0 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் (3) - (1.1) | 408.6 | 479.9 | 26.3 | 17.5 | 17.3 | 17.1 |
| தனியார் | 472.2 | 550.1 | 17.4 | 16.5 | 20.0 | 19.6 |
| அரசு | -63.6 | -70.1 | -18.7 | -10.3 | -2.7 | -2.5 |
| 5. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -30.0 | -40.8 | -45.1 | -35.6 | -1.3 | -1.5 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் | 174.4 | 215.1 | 27.7 | 23.3 | 7.4 | 7.7 |
| 7. தேசிய சேமிப்புக்கள் (4) + (5) + (6) | 553.0 | 654.3 | 25.8 | 18.3 | 23.4 | 23.4 |
| 8. சேமிப்பு முதலீட்டு இடைவெளி | | | | | | |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீடு (4) - (1.2) | -218.9 | -323.4 | | | -9.3 | -11.5 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7) - (1.2) | -74.6 | -149.1 | | | -3.2 | -5.3 |
| 9. அலுவல்சாார் கொடைகள் அற்ற வெளிநாட்டு நடைமுறைக் கணக்குக் குறை (2) + (5) + (6) | -74.6 | -149.1 | | | -3.2 | -5.3 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) எறிவு செய்யப்பட்டது


மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொண்டிருக்கிறது. தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில் முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் அறிவுசார் உலகளாவிய பணிகள் மீதான கல்வியை மேம்படுத்தல் என்பன பணிகள்சார் பொருளாதாரமாக மாறுவதற்கான இலங்கையின் உள்ளார்ந்த வளத்தைத் தூண்டும். இது அத்துறைகளில் பணி வழங்கலில் மேற்கொள்ளப்படும் உற்பத்தித் திறன் மேம்பாடுகளூடாக கைத்தொழில் மற்றும் வேளாண்மை ஆகிய இரண்டு துறைகளிலும் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சியை அடைவதற்கும் இது வசதியளிக்கும்.


**உள்நாட்டுச் சேமிப்புக்களை உயர்த்துவதிலுள்ள வரையறைகளே கவனத்திற் கொள்கையில் 2006இல் மேம்பட்ட, முதலீடுகள் விரிவடைந்த சேமிப்புக்கள் - முதலீடுகளின் இடைவெளி என்பன விரும்பத்தக்க பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைவதில் வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பவற்றின் முக்கியத்துவத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.** தனியார் முதலீட்டின் கணிசமான அதிகரிப்பு, மொத்த முதலீடு 2005இன் மொ.உ.உற்பத்தியின் 26.5 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 28.7 சதவீதத்துக்கு அதிகரிப்பதற்கு பெருமளவில் பங்களிப்புச் செய்தது. முதலீட்டிலான அதிகரிப்பு, மொ.உ.உற்பத்தியின் 0.4 சதவீத தனியார் சேமிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இணைந்து உள்நாட்டு சேமிப்புக்கள் - முதலீடு இடைவெளியை 19.6 சதவீதத்துக்கு அதிகரிப்பதற்குப் பங்களிப்புச் செய்தது. சென்மதி நிலுவைகள் பற்றாக்குறையின் நடைமுறைக் கணக்கில் கொடைகள் நீங்கலாக பிரதிபலிக்கப்பட்டிருந்தது. தொழிலாளர் பண அனுப்பல் மூலம் வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களால் மேற் கொள்ளப்பட்ட சேமிப்புக்கள் மொ.உ.உற்பத்தியின் 5.3 சதவீதத்துக்கு இவ் இடைவெளியைக் குறைக்க உதவியது. எஞ்சிய இடைவெளி வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள், கடன்கள் மற்றும் அரசுக்கான கொடைகள் மற்றும் சொத்துப் பட்டியல் உட்பாய்ச்சல்கள் என்பவற்றினூடாக நிதியிடப்பட்டது. 'மூலதன - வெளியீடு விகிதத்திலான அதிகரிப்பு' 1990 களின் 5 இலிருந்து அண்மைக் காலங்களில் 4 இற்கு வீழ்ச்சியடைந்து, மொ.உ.உற்பத்தி வளர்ச்சியை 1 சதவீதப் புள்ளியால் அதிகரிப்பதற்கு மொ.உ.உற்பத்தியின் விகிதமாக, முதலீடு ஆகக் குறைந்தது சராசரியாக 4 சதவீதத்தையாவது இலங்கை கொண்டிருக்க வேண்டுமென்பதை எடுத்துக்காட்டுகிறது. மூலதன வெளியீட்டு விகிதத்தின் அதிகரிப்பு தற்போதைய மட்டங்களில் மாறாதிருந்தால் 8 - 10 சதவீத வளர்ச்சியைப் பேணுவதற்கு பொருளாதாரம் ஆகக் குறைந்தது. மொ.உ.உற்பத்தியின் 32 - 40 சதவீதத்தில் முதலீடுகளின் மட்டத்தை அதிகரிக்க வேண்டும் என்பதனைக் காட்டுகிறது. அண்மைய ஆண்டுகளில் மூலதன - வெளியீட்டு விகிதத்தின் அதிகரிப்பில் ஏற்பட்ட முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதில் கூடிய உற்பத்தித்திறன் உள்ள தனியார் முதலீடுகள் அதிகரித்துச் செல்வதைப் பிரதிபலிக்கின்றது. மேலும் தனியார் துறை முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் உயர் உற்பத்தித்திறனுள்ள அரசதுறை முதலீடுகள் உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு உதவி மூலதன - வெளியீட்டு விகிதத்தின் அதிகரிப்பை எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றக்கூடும். தற்போதைய உள்நாட்டுச் சேமிப்புக்களின் மட்டங்கள் மற்றும் குறுகிய காலத்தில் சேமிப்புக்களை அதிகரிப்பதிலுள்ள வரையறைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, நாடு அவ்வாறான உயர் மட்டமான முதலீடு மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்தல் முக்கியயமானதாகும்.

**நீடித்து நிலைத்திருக்கும் பலமான உலகளாவிய வளர்ச்சி மற்றும் இருபுடை மற்றும் பல்புடை உடன்படிக்கைகளினூடாக முன்னுரிமைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தமை என்பவற்றால் வெளிநாட்டுத்துறை தொடர்ந்தும் விரிவடைந்தது.** இலங்கையின் பிரதான ஏற்றுமதி நாடுகளின் உயர் வளர்ச்சி, இருபுடை வர்த்தக ஒழுங்கு முறைகளின் கீழ் பல தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தைகளுக்கான நுழைவு அதிகரித்தமை, புதிய மற்றும் உயர் பெறுமதியுடைய சிறிய சந்தைகளுக்குள் நுழைவதற்கு ஏற்றுமதியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகள்

**வரைபடம் 1.3** பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதியும் மசகெண்ணெய் இறக்குமதிகளின் சராசரி விலையும்




**வரைபடம் 1.4** சென்மதி நிலுவை




என்பவற்றால் நன்மையடைந்து இலங்கையின் ஏற்றுமதிகள் தொடர்ந்து வளர்ச்சியடைந்தன. அதே வேளையில், அரசு மற்றும் தனியார் துறைகளால் மேற்கொள்ளப்பட்ட விரைவுபடுத்தப்பட்ட முதலீடு மற்றும் உயர் பெற்றோலிய விலைகள் என்பன இறக்குமதிகள் உயர் வீதத்தில் கூடியளவில் வளர்ச்சியடைவதற்கு காரணமாயின. இவ்வாண்டில் நிலவிய தவிர்க்கமுடியாத உயர்ந்தளவான எண்ணெய் விலைகள் வர்த்தக மாற்று வீதம் 3.5 சதவீத மோசமடைவதற்கு இட்டுச் சென்றது. தொழிலாளர் பண அனுப்பல்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு வர்த்தகப் பற்றாக்குறையின் பெரும்பகுதியை நிதியிட உதவியதுடன் நடைமுறைக் கணக்கிலான எஞ்சிய பற்றாக்குறை வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் மூலம் நிதியிடப்பட்டதுடன் அரசுக்கான உட்பாய்ச்சல்களால் திரண்ட சென்மதி நிலுவைகளில் மிகை ஒன்றை உருவாக்கியது. இவ் அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் வகையில் வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் முன்னேற்றமடைந்ததன் மூலம் வெளிநாட்டு அதிர்வுகளுக்கு எதிரான நாட்டின் மீள் எழுச்சி வலுவடைந்தது. வெளிப்படையான பொருளாதார அடிப்படைப் பண்புகளுக்கேற்ப செலாவணி வீதம் சீராக்கப்படுவதை அனுமதிப்பதன் மூலம் மிதக்கவிடும் செலாவணி வீத அமைப்பு தொடர்ந்தமை பொருளாதாரத்தின் மீதான வெளிநாட்டு அதிர்வுகளை குறைப்பதற்கு உதவியது.

**2006இல் இறைக் கொள்கை இறைத்துறையில் நீண்ட காலத்தில் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையை அடைவதில் தொடர்ந்து கவனஞ் செலுத்திய அதேவேளை வறியோர் சார்ந்த மற்றும் வளர்ச்சி சார்ந்த அபிவிருத்தியை மேம்படுத்தியது.** அரசிற்கு நடுத்தரகால பேரண்ட இறைக் கொள்கை கட்டமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்ட பொதுவான பேரண்டப் பொருளாதார தொலைநோக்குடன் இணைந்து செல்லும் விதத்தில் இறைக்கொள்கை உபாயம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விறைக் கொள்கைக் குறிக்கோள்கள், பன்னாட்டு உயர் எரிபொருள் விலைகள், தேசிய பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான தேவை, சார்புரீதியில் உயர் பணவீக்க அழுத்தங்கள் மற்றும் அதிகரித்துச் செல்லும் உயர் வட்டி வீதங்கள் என்பவற்றிலிருந்து எழும் சவால்களுக்கு மத்தியிலும் அடைய வேண்டியிருந்தது. இச் சவால்களுக்கு மத்தியில் இறைத் தொழிற்பாடுகளில் பல முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டன. அதே வேளையில், குறிப்பாக, மீண்டெழும் செலவினம் எல்லை மீறிச் சென்றமை, குறைவாகச் செயலாற்றும் அரச முதலீடு மற்றும் பற்றாக்குறையை கூடியளவிற்கு வங்கிகள் மூலம் நிதியிடுதல் என்பன எடுத்தியம்பப்பட்ட கட்டுப்படுத்தப்பட வேண்டிய விடயங்களாக தொடர்ந்து காணப்படுதல் கரிசனைக்குரிய விடயமாகும்.

**மொ.உ.உற்பத்தி விகிதத்துக்கான அரசிறையில் அதிகரித்துச் செல்லும் போக்கை நீடித்து நிலைத்து கைத்திருப்பதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்ட பலமான முயற்சிகள் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் வெற்றிகரமாக விளங்கியது.** 2006இல் மொத்த அரசிறை முன்னைய ஆண்டின் 16.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 17.0 சதவீதத்தை அடைந்தது. வரி அரசிறை தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டில் அதன் அதிகரித்துச் செல்லும் போக்கைத் தொடர்ந்து, அரசின் முயற்சிகளுக்கு, குறிப்பாக வரிக் கொள்கை, வரி நிருவாகம் மற்றும் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்டவாக்கங்கள் என்பவற்றுக்கு பதிலிறுத்துச் செல்லும் வகையில் 2005இன் 14.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 15.3 சதவீதத்துக்கு அதிகரித்தது. அரச முதலீடு முன்னைய ஆண்டைப் போலவே மொ.உ.உற்பத்தியின் 6.3 சதவீதமளவில் மாற்றமின்றி காணப்பட்டது. பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பினை முன்னேற்றுதல் தொடர்ந்தும் அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் உயர் முன்னுரிமைத் துறைகளாக விளங்கின. எனினும், தேசிய பாதுகாப்பு, மனிதாபமான நிவாரணம், சம்பளங்கள் மற்றும் கூலிகள், ஓய்வூதியம் மற்றும் எரிபொருள் உதவு தொகை என்பன மீதான செலவினம் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டதைவிட உயர்ந்து காணப்பட்டதால் அரசு, மீண்டெழும் செலவினம் மீது அதன் இலக்கை விஞ்சியது. இதனால், மொ.உ.உற்பத்திக்கான மீண்டெழும் செலவினத்தின் விகிதம் முன்னைய ஆண்டின் 18.7 சதவீதத்திலிருந்து 19.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்த வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை 2005இன் 8.7 சதவீதத்திலிருந்து 2006இல் மொ.உ.உற்பத்தியின் 8.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. குறிப்பாக இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் அதிகரித்துச் செல்லும் உள்நாட்டு வட்டி வீதங்கள் மற்றும் உயர் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பவற்றைக் கருத்திற் கொள்கையில் வரவு செலவுத் திட்டத்தை நிதியிடல் சவால்மிக்கதாகக் காணப்படுகிறது. அரசு பெருமளவுக்கு வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டு நிதியிடலுக்கு மாறியதன் மூலம் அரசு அதிகரித்துச் செல்லும் உள்நாட்டு வட்டி வீதங்களுக்கான வெளிப்படுத்துகையை பகுதியளவில் தணித்தது. இது அரச வங்கிகளுடனான உயர் மேலதிகப்பற்று நிலுவைகளுடன் இணைந்து எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தைவிட கூடிய மட்டத்திற்கு வங்கித் தொழில் துறையிலிருந்தான அரசின் கடன்பாடுகளை அதிகரித்ததன் மூலம் நாணய முகாமைத்துவத்தை இடர்பாட்டுக்குள்ளாக்கியது. உள்நாட்டு மூலங்களிலிருந்தான நிதியிடல் மொ.உ.உற்பத்தியின் 5.8 சதவீதமாக விளங்குகையில் எஞ்சியவை வெளிநாட்டு மூலங்கள் மொ.உ.உற்பத்தியின் 2.6 சதவீதமாக விளங்கின.

**அட்டவணை 1.3** வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்

| | ஐ.அ.டொ மில் 2005 | ஐ.அ.டொ மில் 2006 | % மாற்றம் |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **6,347** | **6,883** | **8.4** |
| வேளாண்மை உற்பத்திகள் | 1,154 | 1,293 | 12.1 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 4,948 | 5,383 | 8.8 |
| கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 143 | 136 | -5.1 |
| ஏனைய ஏற்றுமதிகள் | 101 | 70 | -30.8 |
| **இறக்குமதிகள்** | **8,863** | **10,253** | **15.7** |
| நுகர்வுப் பொருட்கள் | 1,644 | 1,980 | 20.4 |
| இடைநிலைப் பொருட்கள் | 5,317 | 5,962 | 12.1 |
| முதலீட்டுப் பொருட்கள் | 1,870 | 2,246 | 20.1 |
| ஏனையவை | 32 | 65 | 100.7 |
| **வர்த்தக நிலுவை** | **-2,516** | **-3,370** | **34.0** |
| **பணிகள், தேறிய** | **338** | **257** | **-24.1** |
| பெறுகைகள் | 1,540 | 1,625 | 5.5 |
| கொடுப்பனவுகள் | 1,202 | 1,368 | 13.8 |
| **வருமானம், தேறிய** | **-303** | **-388** | **28.0** |
| பெறுகைகள் | 35.6 | 311.2 | 774.6 |
| கொடுப்பனவுகள் | 339.0 | 699.6 | 106.4 |
| **தனியார் நடைமுறை மாற்றல்கள், தேறிய** | **1,828** | **2,169** | **18.6** |
| தனியார் பணவனுப்பல், தேறிய | 1,735 | 2,068 | 19.2 |
| பெறுகைகள் | 1,968 | 2,326 | 18.2 |
| கொடுப்பனவுகள் | 233 | 257 | 10.5 |
| **நடைமுறைக் கணக்கு நிலுவை** | **-654** | **-1,334** | **104.1** |
| **மூலதனக் கணக்கு** | **250** | **291** | **289.0** |
| **நிதியியல் கணக்கு** | **974** | **1,517** | **55.7** |
| நேரடி முதலீடு , தேறிய | 234 | 451 | 93.0 |
| உட்பாய்ச்சல்கள் | 272 | 480 | 76.5 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 38 | 29 | -23.5 |
| தனியார் நீண்டகால,தேறிய | 11 | -35 | -418.2 |
| உட்பாய்ச்சல்கள் | 199 | 139 | -30.2 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 188 | 174 | -7.5 |
| அரச நீண்டகால, தேறிய | 553 | 491 | -11.3 |
| உட்பாய்ச்சல்கள் | 747 | 932 | 24.7 |
| சுனாமி தொடர்பான உட்பாய்ச்சல்கள் | 93 | - | |
| வெளிப்பாய்ச்சல்கள் | 194 | 441 | 127.9 |
| குறுங்கால: | 176 | 610 | 246.8 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு, தேறிய | 60 | 51 | -15.6 |
| தவறுகளும் விடுபாடுகளும் | -69 | -270 | |
| **மொத்த நிலுவை** | **501** | **204** | |
| அரசுசார் மொத்த ஒதுக்குகள் (ஆதீஒஇல்லாமல்) | 2,458.1 | 2,524.7 | |
| மாதத்துக்கான இறக்குமதிகள் | 3.3 | 3.0 | |
| மொத்த ஒதுக்குகள் (ஆதீஒஇல்லாமல்) | 3,923.6 | 3,572.5 | |
| மாதத்திற்கான இறக்குமதிகள் | 5.3 | 4.2 | |
| படுகடன்களுக்கான சட்ட இசைவுத் தாமதம் | 264.0 | - | |
| ஏற்றுமதி விலைகள் | 98.9 | 103.1 | 4.2 |
| இறக்குமதி விலைகள் | 98.9 | 106.9 | 8.0 |
| வர்த்தக மாற்று விகிதம் | 100.0 | 96.5 | -3.5 |
| **செலாவணி வீதங்கள் (சராசரி)** | | | உயர்வு(+), தேய்வு(-) |
| ரூ/ ஐ.அ.டொ | 100.50 | 103.96 | -3.3 |
| ரூ/ யென் | 0.91 | 0.89 | 1.8 |
| ரூ/ யூரோ | 125.10 | 130.63 | -4.2 |
| ரூ/ ஸ்டேர்லிங் பவுண் | 182.87 | 191.53 | -4.5 |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

**மொ.உ.உற்பத்திக்கான வெளிநின்ற பொதுப்படுகடனின் விகிதம் மூன்றாவது தொடர்ச்சியான ஆண்டாக தொடர்ந்து வீழ்ச்சியடைந்து 2005இன் இறுதியில் 93.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2006இன் இறுதியில் 93.0 சதவீதமாக விளங்கியது.** வெளிநின்ற படுகடன் இருப்பின் பெயரளவு வளர்ச்சியை விரைவாக விஞ்சிய பெயரளவு மொ.உ.உற்பத்தியின் உயர் வளர்ச்சி இம் முன்னேற்றத்தை அடைவதற்கு உதவியது. இருந்தபோதிலும், பெயரளவு நியதிகளிலான மொத்த அரச படுகடன் ரூ.384 பில்லியனால் ரூ.2,606 பில்லியனுக்கு அதிகரித்தது. வெளிநாட்டுக் கொடைஞர்களால் வழங்கப்பட்ட படுகடனைத் செலுத்துவதற்கான சட்ட இசைவுத் தாமதம் முடிவுக்கு வந்துள்ளமையால் படுகடன் பணிக் குறிகாட்டிகள் சுனாமிக்கு முன்னரான அவற்றின் மட்டங்களுக்கு மீண்டன. எனினும் சுனாமிக்கு முன்னரான மட்டங்களுடன் ஒப்பிடுகையில் பல படுகடன் பணிக் குறிகாட்டிகள் முன்னேற்றமடைந்தன.

**2006இல் பதிவு செய்யப்பட்ட முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், இறைத்துறையில் பல முக்கிய பின்னடைவுகள் தொடர்ந்து காணப்படுகின்றன.** இவை, சார்பு ரீதியில் உயர்ந்த அளவான மீண்டெழும் செலவினம், அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்திலான குறைந்தளவுச் செயலாற்றம், வங்கித் தொழில் முறைமையிலிருந்தான உயர் கடன்பாடுகள் மற்றும் சார்பு ரீதியிலான உயர் அரசபடுகடன் சுமை என்பவற்றை உள்ளடக்குகின்றன. இப்பின்னடைவுகளில் உயர் மற்றும் அதிகரித்துச் செல்லும் மீண்டெழும் செலவினம் விசேட கவனத்தை வேண்டிநிற்கிறது. உயர் மீண்டெழும் செலவினம் எப்பொழுதும் சம்பளங்கள் மற்றும் கூலிகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் குடும்ப அலகுகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான மாற்றல்கள் என்பன மீதான தொடர்ச்சியான அதிகரிப்பால் ஏற்படுகிறது. இம்மூன்று விடயங்கள் மீதான செலவினம் மொத்த அரசிறையின் கிட்டத்தட்ட 67 சதவீதத்தை உள்வாங்குவதன் மூலம் இறைத் தொழிற்பாடுகளின் சுதந்திரமான தொழிற்பாடுகளை குறைப்பதன் மூலம் இந் நிலைமை அரசிறைப் பக்கத்தின் நேர்க்கணிய சாதனைகளை எதிர் கணியமாக்கிவிடும். அரச முதலீட்டினூடாக நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கு அரசின் அரசிறையால் மேற்கொள்ளப்படக்கூடிய பங்களிப்பு, உயர் மீண்டெழும் செலவினம் காரணமாக உள்ளார்ந்த வளம்மிக்க மட்டத்தில் இருக்கவில்லைப்போல் தோன்றுகிறது. மீண்டெழும் செலவினத்தின் விஞ்சிய செலவினம் வரவு செலவுத்திட்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் 2006இல் ரூ.38 பில்லியனாக (மொ.உ.உற்பத்தியின் 1.4 சதவீதம்) விளங்கியது. இத்தொகை அரச முதலீட்டுக்கு கிடைக்கத்தக்கதாக இருந்திருப்பின் எதிர்காலத்தில் பல சதவீதப் புள்ளிகளால் மொ.உ.உற்பத்தி வளர்ச்சியை அதிகரிப்பதற்கு பங்களிப்பு செய்திருக்கக்கூடும்.

**நடுத்தரகால வரவு செலவுத்திட்ட கட்டமைப்பு 2006 -2009 மற்றும் பத்து ஆண்டு தொலை நோக்கு 2006 - 2016 என்பவற்றில் வெளிப்படுத்தப்பட்டவாறு அரசு மேற்கூறப்பட்ட குறைபாடுகளை கட்டுப்படுத்துவதற்கு வலுவான பற்றுறுதிகளைக் கொண்டுள்ளமை உற்சாகமளிக்கிறது.** திட்டமிடப்பட்டவாறு தேவையான வழிமுறைகளை உரிய நேரத்தில் அமுல்படுத்துவது அத்தியாவசியமாகும். இல்லாவிடில்


**வரைபடம் 1.5** அரசிறை, செலவினம், வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை




1

பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு, கொள்கைகள்

வரைபடம் 1.6 மொ.உ.உவின் சதவீதமாக அரசபடுகடன்





எந்த விதத்தாமதமும் மிகையான மூலதனத்தேவைப்பாடுகள், தனியார் முதலீட்டுக்கான பணம் இல்லாமல் போதல், உயர் பணவீக்க அழுத்தங்கள் என்பனவற்றை விளைவித்து, நீடித்து நிலைத்திருக்கும் விதத்தில் வறுமை மற்றும் பிரதேசப் பொருளாதார சமநிலையற்ற தன்மையை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட உயர் பொருளாதார வளர்ச்சிப் பாதையை அடைவதை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி விடும்.

**2006இல் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கையை பணவீக்க அழுத்தங்களால் உந்தப்பட்ட எழுச்சிபெற்றுவரும் கேள்வியின் அச்சுறுத்தலைக் குறைப்பதற்கு உயர்பண மற்றும் கொடுகடன் விரிவாக்கத்தைக் குறைப்பதையும் அதேவேளை பொருளாதாரத்தின் தொடர்ச்சியான வளர்ச்சி உத்வேகத்துக்கு உதவுவதையும்** நோக்கமாகக் கொண்டிருந்தது. தீவிர திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக நாளாந்த அடிப்படையிலும், அதேபோன்று நிரந்தரமான அடிப்படையிலும் அளவுக்கதிகமான திரவத்தன்மையை ஈர்ப்பதன் மூலம் சந்தையில் அளவுக்கதிகமான திரவத்தன்மை கட்டியெழுப்பப்படுவதை குறைக்கும் அதேவேளை நாணயக் கொள்கையை இறுக்கமாக்கல் தொடர்ந்து இடம் பெற்றது. மத்திய வங்கியின் கொள்கை வட்டிவீதங்களிலான மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களும் 2004 மற்றும் 2005 இல் அதிகரிக்கப்பட்ட 175 அடிப்படைப் புள்ளிகளுக்கு மேலதிகமாக 2006இன் பின்னரைப்பகுதியில் 125 அடிப்படைப் புள்ளிகளால் உயர்த்தப்பட்டன. இவ்வழி முறைகளுக்கு மேலதிகமாக தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான நாணயக் கடிதங்களுக்கு எதிராக அளவுத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்ட வேளையில் அவ்வாறான அளவுத் தேவைகளை எதிர் கொள்வதற்கு கொடுகடனை வழங்கவேண்டாமென வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன. உயர் கொடுகடன் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தும் மேலுமொரு படியாக நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியூடாக மத்திய வங்கியிலிருந்து வர்த்தக வங்கிகள் கடன்படுவதை ஊக்கமிழக்கச் செய்வதற்கு தார்மீக ஒழுக்காற்றுமுறை தீவிரமாக பிரயோகிக்கப்பட்டது. இம் முயற்சிகள், செயற்படும் சகல கடன்கள்மீது பொதுவான ஒதுக்குத்தேவை போன்றவற்றை வங்கிகள் மீது விதிக்கின்ற முன்மதியுடைய தேவைப்பாடுகள் மற்றும் மூலதனப் போதுமை நோக்கங்களுக்காக கடன்கள் சார்பாக இடர்நேர்வு நிறைகளில் அதிகரிப்பு என்பன மூலம் முழுமைப்படுத்தப்பட்டன. உதவு தொகை தொடர்ந்து காணப்படுதல் வரவு செலவுத்திட்ட நிதியிடல்மீது கூடிய அழுத்தத்தை ஏற்படுத்தி உயர் நாணய விரிவாக்கத்தை விளைவிக்குமாதலால் பெற்றோலிய உதவுதொகையை நீக்கியமை இன்னொரு நடவடிக்கையாகும்.


**இவ்வழிமுறைகள் நாணய விரிவாக்கத்தை ஓரளவிற்கு குறைப்பதற்கான கருவிகளாக அமைகின்றன. எனினும், இவ்வாண்டின் இறுதியை நோக்கி வங்கித் தொழில் முறைமையிலிருந்து அரசதுறையால் பெறப்பட்ட கடன்பாடுகள் பெருமளவில் அதிகரித்தமையால் நாணய இலக்குகளை அடைவது கடுமையான பிரச்சனைக்குரியதாகும்.** இதன் விளைவாக, ஒதுக்குப் பணம் மற்றும் விரிந்த பணம் இரண்டினதும் வளர்ச்சியில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் நேர்மாற்றடைந்தது. 2006 மார்ச்சுவரை வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கைக் கொண்டிருந்த பணவீக்கம், இதன்பின்பு அதிகரிக்கத் தொடங்கி உயர் நாணய விரிவாக்கத்தின் தாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது. இது, வாழ்க்கைச் செலவிலும் ஒரு முறை மட்டும் விலைச்சீராக்கத்தை ஏற்படுத்தும் நிருவகிக்கப்பட்ட விலைகளின் மாற்றங்களால் மேலும் மோசமாக்கப்பட்டது. எனினும், இவ்விலைச் சீராக்கங்கள், நீண்ட காலத்தில் பணவீக்கத்தைக் கொண்டிருக்கும் நாணய வழங்கலின் விரிவாக்கத்தினூடாக அவ்வாறான பொருட்களுக்கு உதவுதொகை வழங்குவதற்கான தேவையை இல்லாமற்செய்து விடுகிறது. 2007 சனவரியில் மத்திய வங்கி அதன் கொள்கை அறிவிப்பான '2007 இற்கும் அதற்கு அப்பாலுமான நாணய மற்றும் நிதியியல் துறைக்கொள்கைகளில் 2007 இற்கான திட்டமிடப்பட்ட நாணயக் கொள்கைப் பாதையை அது அறிவித்தபோது, 2007 இற்காக நாணய இலக்குகளை ஏற்படுத்தும்போது 2006இல் நாணயக் கூட்டுக்களிலான அளவுக்கதிகமான வளர்ச்சி கவனமான பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**நிதியியல் உட்கட்டமைப்பின் தொடர்ச்சியான அதிகரிப்பு, முக்கிய நிதியியல் நிறுவனங்கள் மீதான ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வை வழிமுறைகள் மற்றும் மேம்பாடடைந்த இடர்நேர்வு முகாமைத்துவம் என்பவற்றுடன் நிதியியல் முறைமை உறுதிப்பாடு 2006இல் மேலும் பலப்படுத்தப்பட்டது.** சில்லறை மற்றும் குறைந்த பெறுமதியுடைய கொடுப்பனவுகளை செயல்முறைப்படுத்துவதற்காக காசோலை பிரதிமைப்படுத்தலும் சுற்றோட்டக் குறைப்பும் முறைமை 2006இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தீர்ப்பனவு செயல்முறையின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தும். நாட்டுக்கான தேசிய கொடுப்பனவுகள் கொள்கையின் உருவாக்கத்தை வசதிப்படுத்தவும், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் உட்கட்டமைப்பின் நவீனமயமாக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் சகல முக்கிய பங்குடைமையாளர்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கும் தேசிய கொடுப்பனவுகள் சபை ஏற்படுத்தப்பட்டது. இலத்திரனியல் கொடுப்பனவுக் கருவிகள் தொடர்பான சட்டரீதியற்ற மற்றும் தீங்கு விளைவிக்கக்கூடிய நடைமுறைகளைத் தீர்மானிப்பதற்கு சட்டவாக்கத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுமுறைமைகள் மேலும் பலப்படுத்தப்படும். உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கொடுகடன் தொழிற்பாடுகள் தொடர்பாக நாணயச்சபையின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்கு நாணயச் சட்டவிதி திருத்தப்பட்டது. சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கொடுகடன் தொழிற்பாடுகள் தொடர்பாக நாணயச் சபையின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்கு நாணயச் சட்டவிதி திருத்தப்பட்டது. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் ஒழுங்கமைப்பும், மேற்பார்வையும் 2006இல் தீவிரப்படுத்தப்பட்டது. மூலதனக் கட்டணத்தின் சமகால கணிப்பீட்டுக்காக வங்கிகளுக்கு வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் பாசல் 11 மூலதனப் போதுமை கட்டமைப்பின் நடைமுறைப்படுத்தலுக்கான தயாரிப்பு வசதிப்படுத்தப்பட்டது. பாசல் மூலதன உடன்படிக்கையுடன் இணைந்து செல்லும் வகையில் சந்தை இடர்நேர்வுக்கான மூலதனக்கட்டணம் 2006இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் நேர்மையை, நம்பகத்தன்மையை, நிதியியல் முறைமையை மேம்படுத்துவதற்கும் பணத்தை தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதியிடல் என்பவற்றால் ஏற்படுத்தப்படும் இடர்நேர்வுகளுக்கு பதிலிறுக்கவும் இத்தோற்றம் பெற்றுவரும் புதிய அச்சுறுத்தல்களை கட்டுப்படுத்துவதற்கு அனைத்தையுமுள்ளடக்கிய சட்டத்தை இலங்கை அறிமுகப்படுத்தியது. நிதிக் கம்பனிகளுடன் தொடர்பான மதிநுட்பமான நியமங்கள் புதிய ஆகக்குறைந்த மைய மூலதனத் தேவைப்பாடு மற்றும் மூலதனப் போதுமை விகிதம் என்பவற்றை விதித்தன் மூலம் மேலும் பலப்படுத்தப்பட்டன.

**வரைபடம் 1.7** ஒதுக்குப் பணத்தினதும் விரிந்த பணத்தினதும் வளர்ச்சி




**வரைபடம் 1.8** வட்டிவீத அசைவுகள்




கொடுகடன் தகவல் பணியகத்தின் பரப்பெல்லையை நவீனமயப்படுத்துவதற்கும் விரிவாக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**நிதியியல்துறை 2006இல் மேலும் விரிவடைந்து உயர் பொருளாதார செயற்பாட்டுக்கு உதவியது. 2006இல் நிதியியல் துறை நிறுவனங்களின் செயலாற்றம் 2006இல் இலாபகரத்தன்மை, மூலதன மட்டங்கள், சொத்துக்களின் தரம், பணிகளின் வீச்சு மற்றும் வழங்கப்பட்ட பணிகள் ஆகிய நியதிகளில் மேலும் விரிவடைந்தது.** முக்கியமாக வேளாண்மைத்துறை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் நிதியிடுவதற்கான நுழைவை அதிகரிப்பதற்கு இவ்வாண்டில் பல கொள்கை முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. நிதியியல் சந்தைகளிலான செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டதுடன், விசேடமாக பங்கு மற்றும் வெளிநாட்டு செலாவணிச் சந்தைகளில் உயர் வர்த்தகப்படுத்தல் அளவுகள் பதிவு செய்யப்பட்டன. முதலீட்டாளர் தளத்தை விரிவாக்கி முறிகள் சந்தையில் போட்டியை அதிகரிக்கக்கூடிய வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக திறைசேரி முறிகளை திறந்துவிட்டமை உள்நாட்டு நிதிச் சந்தையிலேற்பட்ட மேலுமொரு அபிவிருத்தியாகும்.

## 1.2 வெளிநாட்டுப் பொருளாதாரச் சூழல்

**அதிகரித்துச் செல்லும் குறுகிய தவணை வட்டி வீதங்கள், உயர் எண்ணெய் விலைகள் உள்ளடங்கலாக பொருட்களின் உயர் விலைகள் மற்றும் அதிகரித்துச் செல்லும் சந்தைத் தளம்பல் என்பவற்றுக்கு மத்தியிலும் உலகப் பொருளாதாரம் நான்காவது தொடர்ச்சியான ஆண்டாக 2006இல் பலமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** ஐக்கிய அமெரிக்கப் பொருளாதாரம் மெதுவடைதல் மற்றும், எண்ணெய் மற்றும் பொருட்களின் உயர் விலைகள் என்பவற்றுக்கு மத்தியிலும் ஐரோப்பா மற்றும் ஜப்பானிலான மீட்சி விசேடமாக இந்தியா மற்றும் சீனா உள்ளடங்கலாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலான மிகப்பலமான விரிவாக்கம் காரணமாக உயர் வளர்ச்சி அடையப்பட்டது. 'உலகப் பொருளாதார தோற்றப்பாடு (2006 செத்தெம்பர்)' இன்படி உலகளாவிய உண்மை மொ.உ.உற்பத்தி 2005இன் 4.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2006இல் 5.1 சதவீதத்தால் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. இவ் உயர் வளர்ச்சியுடன் இணைந்து செல்லும் விதத்தில் உலக வர்த்தகம், அளவு நியதிகளில் 2005இன் 7.4 சதவீதத்திலிருந்து 2006இல் 8.9 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. 2006 இல் இலங்கை, வெளிநாட்டுத்துறை உயர் வர்த்தக வளர்ச்சியிலிருந்து நன்மையடைந்தது. பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு தொடர்ச்சியான உலகளாவிய உயர் வளர்ச்சியுடன் உலகளாவிய பணவீக்கம் அதிகரித்துச் செல்லும் அறிகுறிகளைக் காட்டி அபிவிருத்தியடைந்த மற்றும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்கள் பலவற்றால் மேற்கொள்ளப்பட்ட இறுக்கமான கொள்கை வீதங்களுடன் உலகளாவிய குறுங்கால வட்டி வீதங்கள் படிப்படியாக அதிகரித்தன. அபிவிருத்தியடைந்த மற்றும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்கள் பலவற்றில் வெளியீட்டு இடைவெளி ஒடுங்கிச் செல்வதற்கு வழிவகுக்கும். முக்கியமாக அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலைகளின் மோசமான விளைவுகளால் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் பலவற்றில் முதன்மைப் பணவீக்கம் அதிகரித்துச்செல்கிறது. இந்நாடுகளிலான மையப் பணவீக்கம் கூட அதிகரிப்புக்களைக் காட்டின.

**உலகப் பொருளாதாரம் ஐந்தாவது தொடர்ச்சியான ஆண்டாக 2007இலும் தற்போதைய உயர் வளர்ச்சி உத்வேகத்தை தொடர்ந்து உறுதிபூண்டிருக்கிறது.** இது உலகப் பொருளாதாரத்தின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் இது அநேகமாக 'பிறெற்றன்வூட்' காலப்பகுதிக்குப் பின் நீண்ட காலத்துக்கு நிலைத்து நீடித்திருக்கும் வளர்ச்சியைக் கொண்ட காலப்பகுதிகளில் ஒன்றாகவும் அமைகிறது. இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தைகளில் ஒன்றான ஐக்கிய அமெரிக்கா தொடர்ச்சியான நாணய இறுக்கமாக்கலுக்கு பதிலிறுக்கும் வகையிலும் மற்றும் தனியார் நுகர்வு மற்றும் வதிவிட முதலீடு என்பவற்றை ஊக்கமிழக்கச் செய்யும் மெதுவடைந்து செல்லும் வீடமைப்பு சந்தை காரணமாகவும் 2007இல் மெதுவடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், மெதுவடைந்த ஐக்கிய நாட்டு பொருளாதாரத்திலிருந்து ஏனைய பொருளாதாரங்களுக்கு செல்லக்கூடிய பாதிப்பு மிகவும் குறைந்ததாகும். ஐரோப்பிய பிரதேசத்திலான விரிவடைந்த மீட்சி ஐக்கிய அமெரிக்காவில் ஏற்படக்கூடிய சாத்தியமான மெதுவடைவின் எத்தகைய மோசமான விளைவையும் எதிரீடு செய்யும். தோற்றம் பெற்றுவரும் நாடுகளும் உயர்வீதத்தில் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளதுடன் இந்தியா மற்றும் சீனா பலமாக தொடர்ந்து விரிவடையும் . சிறிய திறந்த பொருளாதாரமாக இருக்கும் இலங்கை எறிவு செய்யப்பட்ட செழிப்பான உலகளாவிய பொருளாதார வளர்ச்சியிலிருந்து நன்மையடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இவ் எறிவுகளுக்குக் கூட கீழ்நோக்கிய சில இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவின் நடைமுறைக்கணக்கு 2007இல் அதன் மொ.உ.உற்பத்தியின் 6.9 சதவீதத்துக்கு மேலும் விரிவடையும் என்ற எறிவுடன் உலகளாவிய சமநிலையற்றதன்மை அதிகரிக்கக்கூடும். ஐக்கிய அமெரிக்க டொலரிலான எந்தவிதமான முறையற்ற சீராக்கமும் எதிர்பாராத நிதியியல் நெருக்கடிகளுக்கு இட்டுச் சென்று சமநிலையற்றதன்மையை மோசமாக பாதிக்கக்கூடும். அதேவேளை,

சிறப்புக் குறிப்பு 2

## வங்கிகளில் பொதுமக்களின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தல்

### பொதுமக்களின் நம்பகத்தன்மையின் முக்கியத்துவம்

வங்கிகளில் பொதுமக்களின் நம்பகத்தன்மையானது, வங்கிகள் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான ஓர் முக்கிய விடயமாக காணப்படுகிறது. வங்கிகளினுடைய மையத்தொழில் வியாபாரமானது, சேமித்து வைப்பு செய்பவர்களிடமிருந்து பணத்தை ஏற்றுக் கொள்வதும் அத்தகைய பணத்தை ஏனைய தேவைகளுக்கான நிதிகளாக முதலிட்டு அல்லது பயன்படுத்தி கொள்பவர்களுக்கு கடன் வழங்குவதேயாகும். தேவைப்படும் போது பணத்தை அல்லது வைப்புக்களை வங்கிகள் மீளச் செலுத்தும் என்ற நம்பிக்கையிலேயே பொதுமக்கள் வங்கிகளில் வைப்புக்களை பேணுகின்றனர். பெரும்பாலான வைப்பாளர்கள் தங்களுடைய சேமிப்புக்களை பேணுவதற்கான சட்டரீதியான முகவர்களாகவே வங்கிகளை கருதுகின்றனர். எனவே, வங்கிகள் இலாபம் உழைப்பதற்காக நிதிச் சேவைகளை வழங்குதல் மற்றும் அத்தகைய வைப்புக்களை பயன்படுத்துதல் போன்றவற்றிற்கு விசேடமாக அனுமதிக்கப்பட்டுள்ளன. பொதுமக்களின் நம்பகத்தன்மையானது. பலவீனமான இடர்நேர்வு முகாமைத்துவத்தால் ஒரு வங்கி தன்னுடைய நிதியியல் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தவறும் சந்தர்ப்பத்தில் மட்டுமல்லாமல் முழு வங்கித்தொழில் முறைமைகளினூடான வங்கித் தோல்விகளுடைய எதிர்பாரா விளைவுகள் மற்றும் பொருளாதார குழப்பங்கள் என்பவற்றின் காரணமாகவும் இழக்கப்படலாம் அல்லது பாதிப்புக்குள்ளாகலாம். எனவே, பொதுமக்களின் நம்பகத்தன்மைக்கு பின்னால் உள்ள அடிப்படை அம்சம் வங்கிகளினுடைய பாதுகாப்பு மற்றும் ஆற்றல் வாய்ந்த தன்மை என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

இந்த அடிப்படையில், உலகளாவியளவில் வங்கித்தொழில் அதிகார சபைகள் வங்கித்தொழில் முறமையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றலினை மேம்படுத்தும் பொருட்டு வங்கித்தொழில் முறைமையினுடைய நுழைவாயில் - பேணல்கள் மற்றும் வதிவிட - பேணல்கள் என்பவற்றை சுற்றி வேறுபட்ட ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. நுழைவாயில் பேணல்கள் ஆகக் குறைந்த நுழைவு மூலதனம் மற்றும் அனுமதித் தேவைப்பாடுகள் என்ற அடிப்படையில் வங்கிகளுடைய உள் நுழைவு மற்றும் வெளிச் செல்லுகையுடன் தொடர்பான தேவைப்பாடுகளுடன் தொடர்புபடுகின்றன. வதிவிடப் பேணல்கள் வங்கிகளுடைய இடர்நேர்வு முகாமைத்துவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஆகக் குறைந்த மூலதனப் போதுமைத்தன்மை விகிதங்கள், ஆகக் குறைந்த திரவத்தன்மை விகிதங்கள், கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள், தனியாள் கடன்பாட்டு எல்லைகள், உரிமையாண்மை எல்லைகள், நெருக்கமான மேற்பார்வை மற்றும் பிரச்சனை தீர்வு போன்ற முன்மதியுடைய தேவைப்பாடுகளை உள்ளடக்குகிறது. மேலும் நேரிடக்கூடிய வங்கி முறிவுகளின் எதிர்பாரா இடர்நேர்வுகளை தடுக்கும் பொருட்டு நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினை அதிகார சபைகள் மேற்பார்வை செய்கின்றன.

### பொதுமக்களின் நம்பகத்தன்மையைப் பேணுவதற்கு எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள்

மத்திய வங்கியானது, வங்கிகளில் பொதுமக்களின் நம்பகத்தன்மையை வலுப்படுத்துதல், பாதுகாத்தல் என்பவற்றின் பொருட்டு பாசல் நியமங்களைப் பின்பற்றல் உட்பட சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இணைந்த வகையிலான ஓர் தொடர்ச்சியான நியம ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை செயற்படுத்தியது. மேலும், வங்கிகளுடைய குறிப்பிடத்தக்க பிரச்சனைகளான மூலதனப் போதுமைத்தன்மை மற்றும் திரவத்தன்மை பற்றாக்குறை போன்றவற்றை விபரிப்பதற்கு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை முன்னெடுத்தது. அரச வங்கிகளில் பொதுமக்களின் நம்பகத்தன்மையை கட்டியெழுப்பும் பொருட்டு, 1990 களின் ஆரம்பத்திலிருந்து அரசாங்கத்தால் பல சுற்றுக்களாக அரச வங்கிகளில் மீள் மூலதனமிடல் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. பிரமுக வங்கியினுடைய சந்தைப் பங்கானது விசாலமான நிதியியல் முறைமையில் எத்தகைய தாக்கத்தையோ அல்லது பொதுமக்களின் நம்பகத்தன்மையில் கணிசமான தாக்கத்தையோ உண்டுபண்ணக் கூடிய அளவுக்கு முக்கியத்துவம் அற்றவையாக இருப்பினும் கூட, 2002 ஒத்தோபரில் வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி என்ற ஒரு சிறிய வங்கியினுடைய தோல்வியை தொடர்ந்து சிறிய வங்கிகளுடைய ஆற்றல்தன்மை மற்றும் தாங்குதிறன் என்பன தொடர்பில் சில பொதுமக்கள் கவலையடைந்தனர். தோல்வியடைந்த பிரமுக வங்கியினுடைய வியாபாரங்களை பொறுப்பேற்பதற்கும் இலங்கை சேமிப்பு வங்கி என்ற ஓர் புதிய அரச வங்கியை தாபிப்பதற்கும் 2006 மற்றும் 2007இல் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தினுடைய கொள்கைகளை சிறிய வங்கிகளில் பொதுமக்களின் நம்பகத்தன்மையை கட்டியெழுப்புவதை நோக்கி எடுக்கப்பட்ட ஒரு முக்கிய படியாகும். மேலும் மத்திய வங்கியானது வங்கிகளில் பொதுமக்களின் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்கும் நேரிடக்கூடிய இடர்நேர்வுகளை குறைப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. அவற்றுள், இரண்டு நன்கு தாபிக்கப்பட்ட வங்கிகளுடைய உதவியுடன் 2003இல் மேற்கொள்ளப்பட்ட இரண்டு சிறிய வங்கிகளுடைய மீள்கட்டமைப்பு மற்றும் வங்கிகளுடைய ஆகக்குறைந்த நுழைவு மூலதன தேவைப்பாடுகளை உயர்த்துவதற்காக 2005 ஏப்பிறல் அறிவித்தல்கள் என்பன முக்கியமான செயற்பாடுகளாக இருந்தன. அத்துடன் அவை வங்கிகளுக்கிடையிலான திரட்சியினை மேம்படுத்தவும் உதவின.

அதேபோன்று ஒரு சில தனியார் வங்கிகளின் உரிமையாண்மையில் ஆதிக்கம் செலுத்துவதுடன் தொடர்புடைய விவகாரங்கள் சேமிக்கும் பொதுமக்கள் மற்றும் நிதியியல் சமுகங்களுக்கிடையில் புதிய அச்சங்களைத் தோற்றுவித்துள்ளது. 2007 சனவரியில் வங்கி உரிமையாண்மையினுடைய ஒழுங்குபடுத்தல்களுக்காக புதிய கொள்கை வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் மத்திய வங்கியால் அத்தகைய பயன்களை வெற்றிகரமாக கையாளக்கூடியதாக இருந்தது. இதன் பிரகாரம் வங்கிகளில் உரிமையாண்மையின் பரந்த எல்லையானது, தனிப்பட்ட பங்குதாரர்கள் அல்லது குழுக்களால் வைத்திருக்கப்படும் பெருந்தொகை உரிமையாண்மையானது அதிகூடுதலாக ஐந்து வருட காலப்பகுதிக்குள் 15 சதவீதத்திற்கு குறைக்கப்பட வேண்டும் என கேட்கப்படுதலானது பணிப்பாளர் சபைகளின் நலன்களின் முரண்பாடுகளை தவிர்க்கும் பொருட்டு எடுக்கப்பட்ட ஓர் முக்கியமான கொள்கை நடவடிக்கையாகும். 2006இன் இறுதிப்பகுதியிலிருந்து நுகர்விற்கான கொடுகடனில் முன்னெப்பொழுதும் நிகழ்ந்திராத ஓர் வளர்ச்சியைக் காட்டியது. அத்துடன் நுகர்விற்கான கொடுகடனுடைய ஓர் உயர் குவிவை கட்டுப்படுத்துவதற்கு முன்மதியுடைய ஒழுங்குபடுத்தலுக்கு உதவும் நாணயக் கொள்கை தேவைப்படுத்தப்படுகிறது. கொடுகடன்களில் **மோசமான தன்மையினை ஏற்படுத்தக்கூடிய உயர்ந்த வீதத்தில் அதிகரிக்கும் கொடுகடன் வீதம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய கரிசனைக்குரிய விடயமாகவுள்ளது.**

**இக்கரிசனைகளை கட்டுப்படுத்துவதற்காக, ஏற்கனவேயுள்ள ஒதுக்கு விதிகளுக்கு மேலதிகமாக, அனைத்து செயற்படாக் கடன்களினதும் 1 சதவீதம் கொண்ட பொது ஒதுக்கினை பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. எனினும் வங்கிகளின் இலாபத்தன்மை மீது இவ்வழிமுறை கொண்டிருக்கும் தாக்கத்தினை கருத்திற்கொண்டு இப்பொது ஒதுக்கினை நடைமுறைப்படுத்துவது பத்து காலாண்டுகளுக்கு பின் காட்டப்பட்டதுடன் 2006ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிலிருந்து ஒவ்வொரு காலாண்டும் 0.1 சதவீதத்தினை ஒதுக்குமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.**

**கடன் வழங்கலின் ஆகக்கூடிய தொகை மீதான முன்மதியுடைய தேவைப்பாடுகளும் 2007 பெப்புருவரியில் திருத்தப்பட்டதுடன் இது கொடுகடன் பகிர்ந்தளிப்பினை விரிவடையச் செய்து, கொடுகடன் குவிவுகள் இடர்நேர்வுகளை தணிப்பதுடன், வங்கிகளின் மூலதனப் போதுமை விகிதத்தினையும் வாடிக்கையாளர் மற்றும் வங்கிகளின்**

**சிறப்புக் குறிப்பு 2 (தொடர்ச்சி)**

## வங்கிகளில் பொதுமக்களின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தல்

**கொடுகடன் தரமிடல்களையும் பரிசீலனைக்கெடுப்பதன் மூலம் வங்கிகளினதும் வாடிக்கையாளர்களினதும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேம்படுத்தவும் எதிர்பார்க்கிறது.**

நடைமுறைப்படுத்தப்படாமலிருக்கும் ஏனைய பிரதான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுள், வங்கிகளுடைய செயற்றிறன் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான பொறுப்புக்கூறும் தன்மை போன்றவற்றிற்காக வங்கியினுடைய பணிப்பாளர் சபைகளை பொறுப்பாக்கும் கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டிய கூட்டிணைப்பு ஆளுகையினுடைய நியதி மற்றும் வங்கிகளின் மூலதனத்துடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தை இணைத்து மேம்படுத்துவதற்கான பாசல் II மூலதனப் போதுமைத்தன்மை கட்டமைப்பு என்பன முக்கியமான நடவடிக்கைகளாக இருக்க முடியும்.

வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுடைய ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வைக்கான கூட்டிணைப்பு ஒழுங்கமைத்தல்களை ஊக்குவிக்கும் பொருட்டு நிதியியல் ஒழுங்குபடுத்துநர்களுடைய பிரதிநிதிகளை கொண்டமைந்த ஓர் இயங்கும் குழு மற்றும் ஓர் உயர் மட்ட உள்ளக ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின் சபை என்பன நியமிக்கப்பட்டன. இயங்கும் குழு மற்றும் உள்ளக ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின் சபை என்பன ஓர் பல்வகை ஒழுங்குபடுத்தல் அமைப்பில் தகவல்களுடைய ஒழுங்குபடுத்தல் பரிமாற்றங்களை நிறுவுவதற்கு உதவ முடியும். பிரச்சனைகளை இனங் காண்பதற்கும் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் மத்திய வங்கியினுடைய தார்மீக வற்புறுத்தல் அதிகாரங்களின் பிரகாரம் பொருத்தமான தீர்வுச் செயற்பாட்டு ஒழுங்கமைப்பிற்கு மத்திய வங்கியை இயலச் செய்யும் இத்தகைய நடவடிக்கைகள் வங்கிகளுடைய நெருக்கமான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக்கு மேலதிகமான ஒன்றாகக் காணப்படும்.

**சந்தை ஒழுக்காற்றினை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகள்**

சந்தை ஒழுங்குகள் முன்னேற்றமடையாவிட்டால் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளூடாக வழங்கப்படும் பாதுகாப்பு வலை ஒரு விரும்பத்தக்க முறையில் அமையாது. எனவே, பொதுமக்கள் அவர்களுடைய சொந்த தீர்மானங்களுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை ஏற்றுக் கொள்ள தயார்படுத்தப்பட வேண்டும், அல்லாது விடின் பொதுமக்களுடைய நலன்களிற்கான ஒழுங்குபடுத்தல் பாதுகாப்பினுடைய கிடைப்பனவுத் தன்மை காரணமாக அதிக இடர்களை எதிர்கொள்வதற்கு பொதுமக்களை ஊக்கப்படுத்தும் நிலைமையான ஒழுங்குபடுத்துநர்களுடைய தார்மீக ஆபத்து பிரச்சனை அதிக செலவுடையதாக இருக்கும். இது தொடர்பில் மத்திய வங்கியானது வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களில் உள்ளடங்கக்கூடிய இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக ஊடகம் மற்றும் வேறுபட்ட வெளிநாடுகளுடைய வழங்கல்கள் ஊடாக பொதுமக்கள் அறிவூட்டல்கள் திட்டங்களை தொடர்ச்சியாக ஊக்கப்படுத்தி வருகிறது. முழுமையான நிதியியல் முறைமைகள் தொடர்பான இடர்நேர்வுகள் பற்றிய ஆய்வுகள் மற்றும் தகவல்களை வெளியிடுகின்ற ஆண்டு நிதியியல் உறுதித்தன்மை அறிக்கைகள் மூன்று வெளியிடப்பட்டுள்ளன. வங்கிகளானது அவர்களுடைய முக்கிய செயற்றிறன் குறிகாட்டிகளை வெளியிடுவதற்காக காலாண்டு அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களை பத்திரிகையில் பிரசுரிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் வங்கிகளானது அனுமதிக்கப்பட்ட தரமிடல் முகவர்களிடமிருந்து கொடுகடன் தரமிடல்களை பெற்றுக் கொள்வதற்கும் வைப்புக்களை வேண்டுகின்ற நோக்கத்துடனான அனைத்து விளம்பரங்களிலும் அத்தகைய தரமிடலை பிரசுரிக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளன. இத்தகைய அனைத்து நடவடிக்கைகளும், ஒரு நிதியியல் நிறுவனத்தில் அல்லது குறிப்பிட்ட வங்கியில் வைப்பிலிடப்பட்ட அல்லது முதலிட்ட அவர்களது பணத்திலிருந்தான திரும்பல்கள் மற்றும் இடர்நேர்வுகளை அளவிடுவது அவர்களுடைய பொறுப்புக்கள் என வைப்பாளர்களும் முதலீட்டாளர்களும் விளங்கிக் கொள்ளச் செய்வதற்கான நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகிறது. ஒழுங்குபடுத்தல்கள் என்பதன் அர்த்தம், சேமிப்பு மற்றும் முதலீட்டை மேற்கொண்ட சேமிப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடைய பாதுகாப்புக்கு ஒழுங்குபடுத்துநர்கள் உத்தரவாதமளிப்பர் என்பது அல்ல. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் நலன் கருதி ஒழுங்குபடுத்தல்கள் வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் சந்தை ஒழுக்காற்று மற்றும் முன்மதியுடைய இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேம்படுத்த முயற்சிக்கிறது.

பணவீக்க அழுத்தத்தை கட்டுப்படுத்துவதற்கு 2006இல் பல நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட நாணய இறுக்கமாக்கல் 2007இன் பொருளாதார வளர்ச்சியை மெதுவாக்கக்கூடும். உச்சமட்ட இயலளவுகளுடன் பொருளாதாரங்கள் தொழிற்படும் சில நாடுகளில், மேலும் விரிவாக்கத்தினை மேற்கொள்ளல் கட்டாயமாக உயர் கூலிக் கேள்விகளுக்கும் செலவால் உந்தப்படும் பணவீக்கத்துக்கும் இட்டுச் செல்லும். மத்திய கிழக்கில் குழப்பங்களுக்கு இட்டுச் செல்லும் எந்தவொரு புவிசார் அரசியற் காரணிகளும் எண்ணெய் விலைகளை மேலும் அதிகரிக்கக்கூடும்.

**பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்காக பல நாடுகள் குறுகியகால வட்டி வீதங்களை உயர்த்தின.** எனினும் உலகளாவிய திரவத்தன்மை நிரம்பிக் காணப்பட்டமையால் நீண்டகால வட்டி வீதங்கள் தொடர்ந்தும் குறைவாகவே விளங்கின. ஐரோப்பிய பிராந்தியம், ஐக்கிய இராச்சியம், அவுத்திரேலியா, சீனா, இந்தியா, கொரியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஜப்பான் , மலேசியா மற்றும் மெக்சிக்கோ அவற்றின் கொள்கை வீதங்களை உயர்த்தின. முன்னைய இறுக்கமாக்கல் மற்றும் வீடமைப்பு சந்தை என்பவற்றின் காலம் தாழ்த்திய விளைவுகளால் வளர்ச்சி மிதமடைந்ததால் 2004 யூனுக்கும் , 2006 யூலைக்கும் இடையில் ஒவ்வொன்றும் 25 அடிப்படைப் புள்ளிகளால் மேற்கொள்ளப்பட்ட பதினேழு அதிகரிப்புக்களுக்குப் பின்பு அதன் கொள்கை வீதச் சீராக்கத்தை ஐக்கிய அமெரிக்கா நிறுத்தியது. 2001 செத்தெம்பரிலிருந்து பூச்சிய வட்டிவீதக் கொள்கையினைப் பேணிய பின்பு ஜப்பான் அதன் கொள்கை வீதங்களை 2006 யூலையிலிருந்து 0.25 சதவீதத்தால் அதிகரித்தது.

**விரிவடைந்து செல்லும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மற்றும் பொருளாதாரத்தின் மெதுவான தன்மை காரணமாக ஐக்கிய அமெரிக்க டொலர் 2006இல் உலகளாவிய சந்தையில் நலிவடைந்தது.** டொலர் முக்கிய நாணயங்களுக்கெதிராக நலிவடைந்தது. இது ஸ்ரேலிங் பவுண் மற்றும் யூரோ என்பவற்றுக்கெதிராக உயர் வீதத்தில் பெறுமதியில் தேய்வடைந்த வேளையில், ஜப்பானிய யென்னுக்கெதிராக சிறிதளவால் பெறுமான உயர்வடைந்தது. 2005இல் ஐ.அ.டொலருக்கெதிராக கூடிய நெகிழ்ச்சித் தன்மையுடன் இருப்பதற்காக மலேசிய றின்ஜிற்றுடன் சேர்ந்து சீன றென்மின்பி அனுமதிக்கப்பட்டதுடன், இது 2006இல் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக படிப்படியாக பெறுமானத்தில் உயர்வடைந்தது. சீன பன்னாட்டு ஒதுக்குகள் 2006இல் 1 றில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை விஞ்சியதுடன், றென்மின்பியில் மேலுமொரு பெறுமதி உயர்வைத் தேவைப்படுத்துகிறது. தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் சில ஏனைய நாடுகள்கூட அவற்றின் ஒதுக்குகளைத் தொடர்ந்து கட்டியெழுப்புகின்றன. தோற்றம் பெற்றுவரும் சந்தைகள் 2006இல் வெளிநாட்டு நிதியிடலினைக் கவர்வதில் சாதனையை பதிவு செய்தன.

**அட்டவணை 1.4** உலகப் பொருளாார அபிவிருத்திகளும் தோற்றப்பாடுகளும் (வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்)

| | உண்மை | | எறிவுகள் | |
|---|---|---|---|---|
| | 2004 | 2005 | 2006 | 2007 |
| **உலக வெளியீடு** | **5.3** | **4.9** | **5.1** | **4.9** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 3.2 | 2.6 | 3.1 | 2.7 |
| ஐக்கிய அமெரிக்கா | 3.9 | 3.2 | 3.4 | 2.9 |
| யூரோப்பகுதி | 2.1 | 1.3 | 2.4 | 2.0 |
| ஐக்கிய இராச்சியம் | 3.3 | 1.9 | 2.7 | 2.7 |
| யப்பான் | 2.3 | 2.6 | 2.7 | 2.1 |
| அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் | 7.7 | 7.4 | 7.3 | 7.2 |
| அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 8.8 | 9.0 | 8.7 | 8.6 |
| சீனா | 10.1 | 10.2 | 10.0 | 10.0 |
| இந்தியா | 8.0 | 8.5 | 8.3 | 7.3 |
| உலக வர்த்தக அளவு | | | | |
| (பொருட்கள் மற்றும் பணிகள்) | **10.6** | **7.4** | **8.9** | **7.6** |
| இறக்குமதிகள் | | | | |
| முன்னேற்றறங்கண்ட பொருளாதாரம் | 9.1 | 6.0 | 7.5 | 6.0 |
| அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரம் | 16.4 | 11.9 | 13.0 | 12.1 |
| ஏற்றுமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 8.8 | 5.5 | 8.0 | 6.0 |
| அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரம் | 14.6 | 11.8 | 10.7 | 10.6 |
| விலை அசைவுகள் | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 2.0 | 2.3 | 2.6 | 2.3 |
| அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரம் | 5.6 | 5.3 | 5.2 | 5.0 |
| பண்ட விலைகள் | | | | |
| எண்ணெய் | 30.7 | 41.3 | 29.7 | 9.1 |
| எரிபொருள் அல்லாதவை | 18.5 | 10.3 | 22.1 | -4.8 |
| ஆறுமாத இ.வ.கி.வ.வீதம் (சதவீதம்) | | | | |
| ஐ.அ.டொலர் வைப்புக்கள் மீது | 1.8 | 3.8 | 5.4 | 5.5 |

மூலம்: உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (செத். 2006) ப.நா.நிதியம்

**கட்டார் டோகாவில், டோகா அமைச்சர்கள் மாநாட்டில் அடையப்பட்ட உடன்படிக்கையின் விளைவாக 2001 பிற்பகுதியில் ஆரம்பமான டோகா அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் கீழ் உலக வர்த்தகம் அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட பல்புடை வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் 2006 யூலையில் முறிவடைந்தன.** அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் வர்த்தகத்தை நியாயமாக மேற்கொள்வதற்கான கவனத்துடன் உலகம் பூராவும் குறைந்த தடைகளுடன் வர்த்தகம செய்வதற்காக புதிய உலக வர்த்தக உடன்படிக்கையை உருவாக்குவதை டோகா அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் நோக்காகக் கொண்டுள்ளது. வேளாண்மைப் பொருட்களுக்கான உதவுதொகை மற்றும் வேளாண்மைப் பொருட்களல்லாதவைக்கான சந்தை நுழைவு என்பன மீது முக்கிய உறுப்பினர் நாடுகளிடையேயான கருத்துக்களில் ஏற்பட்ட வேறுபாடுகள் பல்புடை வர்த்தக பேச்சுவார்த்தைகளில் மூன்று வழிகளில் நெருக்கடிகளை உருவாக்குவதற்கு இட்டுச் சென்றது. டோகா சுற்று பேச்சுவார்த்தைகள் வெற்றிபெறுவதற்கு, அபிவிருத்தியடைந்த நாடுகள் உள்நாட்டுப் பண்ணைகளுக்கான உதவிகளை கூடியளவில் குறைப்பதற்கும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான வேளாண்மைச் சந்தை நுழைவை அதிகரிப்பதற்கும் இணங்கியேயாக வேண்டும். அதேவேளை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் கைத்தொழில் தீர்வைகளைக் குறைத்தேயாக வேண்டும். எனினும், இச் சூத்திரம் மீது எந்தவொரு முக்கிய உலகளாவிய பங்கேற்போராலும் எந்தவொரு பலமான கடப்பாடுகளுக்கும் சிறிதளவான அறிகுறியே காணப்படுகிறது.

## 1.3 நடுத்தரகால பேரண்டப் பொருளாதார தோற்றப்பாடு, சவால்கள் மற்றும் கொள்கைகள்

**'*மகிந்த சிந்தனை*' யின் பொதுவான கொள்கை தொலைநோக்கை அடிப்படையாகக் கொண்ட பத்து ஆண்டு கால அபிவிருத்தி கட்டமைப்பு, (பத்து ஆண்டுதொலை நோக்கு) உறுதியான பேரண்டப் பொருளாதார சூழலுடன் நடுத்தர காலப்பகுதியில் உயர் வளர்ச்சிக்கு இலக்கிடுகிறது.** வளர்ச்சியானது பொருளாதாரத்தின் சகல மூன்று துறைகளிலான உற்பத்தித்திறனின் மேம்பாட்டிலிருந்து வருமென எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மை 5 சதவீதமளவில் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டிருக்கையில், கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகள் நடுத்தர காலத்தில் முறையே 8 சதவீதம் மற்றும் 9 சதவீதத்திற்கும் கூடுதலான உயர் வீதத்தில் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. இவ் இலக்குகளை அடைவதற்கு உட்கட்டமைப்பு, மனித மூலதனம், வேளாண்மை, கைத்தொழில்கள் மற்றும் பணிகள் போன்ற துறைகளில் அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளிலிருந்தும் உயர் முதலீடுகள் தேவைப்படுகின்றன. பல முக்கிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களின் நிர்மாணங்களின் விளைவாலும் வலுவான உலகளாவிய வளர்ச்சியாலும் உதவப்பட்டு தற்போதைய வளர்ச்சி உத்வேகம் நடுத்தர காலத்தில் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் நடுத்தர காலத்தில் மேலும் பலமடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் உயர் வளர்ச்சிப் பாதைக்கும் உதவும், இந்தியா மற்றும் பாக்கித்தானுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள உயர்முதலீட்டையும் வாய்ப்புக்களையும் கவர்வதற்கு முதலீட்டுச் சபையின் ஆரம்ப முன்னெடுப்புக்களில் பிரதிபலிக்கும்வகையில் 2006இல் சாதனை மட்டத்தை அடைந்த வெளிநாட்டு நேரடி முதலீடு நடுத்தர காலத்தில் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2006இன் இறுதியில் அரசு ஐ.அ.டொலர் 4.5 பில்லியன் பெறுமதியில் நிறைவேற்றப்படவிருக்கும் அபிவிருத்தி பங்காளர் கடப்பாடுகளை கொண்டிருந்ததுடன், 2007 சனவரியில் காலியில் நடைபெற்ற இலங்கை அபிவிருத்தி மன்றில் மேலும் ஐ.அ.டொலர் 4.5 பில்லியன் அபிவிருத்தி உதவியை உருவாக்குவதற்கு அரசு அபிவிருத்தி பங்கேற்பாளருடன் மேலும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் மூலம் நடுத்தர காலத்தில் மொத்த அபிவிருத்தி நிதியை ஐ.அ.டொலர் 9 பில்லியனுக்கு அதிகரிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. இறைப் பக்கத்தில், அரசிறைச் சேகரிப்பு படிப்படியாக 19 சதவீதத்துக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டிருக்கையில், படுகடன் முகாமைத்துவத்திலான முன்னேற்றம், வட்டிச் செலவைக் குறைத்தல் மற்றும் அரச பணி வழங்கலை அதிகரித்தல் என்பவற்றின் மூலம் நடைமுறைச் செலவினத்தைக் கட்டுப்படுத்த இலக்கிடப்பட்டுள்ளது. நடுத்தர காலத்தில், இறைத்திரட்சி முயற்சிகள் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை மொ.உ.உற்பத்தியின் 5 சதவீதத்துக்கு கொண்டுவருமென எதிர்பார்க்கப்படுகையில் இறைப் பொறுப்பாண்மைச் சட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டவாறு மொத்தபடுகடன் இருப்பு 85 சதவீதத்துக்கும் கீழ் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**பத்து ஆண்டு தொலைநோக்கு 2007 இறுதியில் பணவீக்கத்தை ஒற்றை இலக்க மட்டத்துக்கு கொண்டுவருவதற்கும் நடுத்தரகாலப் பகுதியில் மேலும் 4 - 6 சதவீதத்துக்குக் குறைப்பதற்கும் இலக்கிடுகிறது.** 2007 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகளுக்கான வழிகாட்டல்களில் அறிவிக்கப்பட்டவாறு, உயர் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிசெய்யும் அதே வேளை பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், 2007ஆம் ஆண்டில் பணவீக்கத்தை தனி இலக்கத்துக்குக் குறைப்பதற்கும் ஏற்றவிதத்தில் நாணயக் கொள்கை நெறிப்படுத்தப்படும். பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு குறைந்தளவானதும் உறுதியானதுமான பணவீக்கம் முற்தேவையாக அமைகிறது.

Central Bank of Sri Lanka 19984 26 APR 2007 LIBRARY & INFORMATION CENTRE

**அட்டவணை 1.5** நடுத்தரகாலப் பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு 2006 - 2010

| குறிகாட்டி | அலகுகள் | 2006(b) | எறிவுகள் 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை** | | | | | | |
| சந்தை விலைகளில் மொ.உ.உ | ரூ. பில்லியன் | 2,802 | 3,267 | 3,777 | 4,336 | 4,965 |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 7.4 | 7.5 | 8.0 | 8.3 | 8.5 |
| பணவீக்க மொ.உ.உ. சுருக்கி | % | 10.3 | 8.5 | 7.0 | 6.0 | 5.5 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ % | 28.7 | 32.0 | 32.5 | 33.0 | 33.5 |
| தனியார் முதலீடு | மொ.உ.உ % | 22.6 | 23.8 | 24.5 | 24.9 | 25.3 |
| அரச முதலீடு | மொ.உ.உ % | 6.1 | 8.2 | 8.0 | 8.1 | 8.2 |
| அதிகரித்த மூலதன வெளியீட்டு விகிதம் | | 3.6 | 4.0 | 4.0 | 3.9 | 3.9 |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் | மொ.உ.உ % | 17.1 | 19.8 | 20.1 | 20.7 | 21.5 |
| தனியார் சேமிப்புக்கள் | மொ.உ.உ % | 19.5 | 19.7 | 19.0 | 18.5 | 18.9 |
| அரச சேமிப்புக்கள் | மொ.உ.உ % | -2.4 | 0.1 | 1.1 | 2.1 | 2.6 |
| தேசிய சேமிப்பு | மொ.உ.உ % | 23.4 | 26.8 | 27.6 | 28.3 | 29.1 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | | | |
| வர்த்தக இடைவெளி | ஐஅடொ.மில் | -3,370 | -3,961 | -4,583 | -5,170 | -5,649 |
| ஏற்றுமதிகள் | ஐஅடொ.மில் | 6,883 | 7,569 | 8,343 | 9,210 | 10,168 |
| இறக்குமதிகள் | ஐஅடொ.மில் | 10,253 | 11,531 | 12,927 | 14,380 | 15,817 |
| பணிகள் | ஐஅடொ.மில் | 257 | 320 | 404 | 512 | 575 |
| பெறுகைகள் | ஐஅடொ.மில் | 1,625 | 1,855 | 2,099 | 2,377 | 2,612 |
| கொடுப்பனவுகள் | ஐஅடொ.மில் | 1,368 | 1,535 | 1,694 | 1,865 | 2,037 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | ஐஅடொ.மில் | -1,334 | -1,481 | -1,555 | -1,703 | -1,827 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ. | -4.9 | -5.0 | -4.6 | -4.5 | -4.3 |
| மொத்த நிலுவை | ஐஅடொ.மில் | 204 | 300 | 372 | 393 | 530 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் (மாதத்திற்கான இறக்குமதி) | மாதங்கள் | 3.0 | 2.9 | 2.9 | 2.9 | 3.0 |
| படுகடன் பணிவிகிதம் (ஆ) | % | 12.8 | 10.8 | 11.4 | 11.8 | 8.8 |
| **இறைத்துறை (இ)** | | | | | | |
| வருவாய் | மொ.உ.உ % | 17.0 | 18.9 | 19.0 | 19.2 | 19.3 |
| செலவு | மொ.உ.உ % | 25.4 | 26.4 | 25.4 | 24.5 | 24.3 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ % | -2.5 | 0.1 | 1.1 | 2.1 | 2.6 |
| மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ % | -8.4 | -7.6 | -6.3 | -5.3 | -5.0 |
| உள்நாட்டு நிதியிடல் | மொ.உ.உ % | 5.8 | 4.7 | 3.7 | 3.1 | 2.9 |
| **நிதியியல்துறை (ஈ)** | | | | | | |
| ஒதுக்குப் பண வளர்ச்சி | % | 21.2 | 11.6 | 14.8 | 14.3 | 14.0 |
| விரிந்த பண வளர்ச்சி (M2b) | % | 17.8 | 14.8 | 15.0 | 14.5 | 14.4 |
| குறுகிய பண வளர்ச்சி (M1) | % | 12.6 | 12.8 | 13.0 | 12.5 | 12.4 |
| தனியார்துறைக் கொடுகடனின் வளர்ச்சி | % | 24.8 | 17.5 | 15.8 | 14.5 | 13.9 |
| அரச துறைக் கொடுகடனின் வளர்ச்சி | % | 39.4 | 2.1 | -0.6 | -0.4 | -0.7 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) வணிக ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்களின் சதவிதமாக மொத்தப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள்
(இ) சுனாமி செலவினமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(இ) ஆண்டின் இறுதிப் பெறுமதிகளில் புள்ளிக்குப்புள்ளி வளர்ச்சி

மூலங்கள் : நிதி திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

உயர் வளர்ச்சி இலக்கிடலை எய்துவதற்கு அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டினதும் முதலீடுகள் கணிசமானளவில் அதிகரிக்கப்பட வேண்டும். இனங் காணப்பட்ட முக்கிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களை அரசால் சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்துவது உட்கட்டமைப்புத் தடைகளை நீக்கி உயர் முதலீடுகளை வசதிப்படுத்தும். எனினும் இதற்குப் பாரிய மூலவளங்கள் தேவைப்படும். இச் செயற்றிட்டங்களை நிதியிடுவதற்கு அரசு உறுதியளிக்கப்பட்ட வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளர் கடன் நிதியங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் அதே வேளையில், உள்நாட்டுச் சந்தையில் தனியார் துறைக்கு கிடைக்கத்தக்கதான தேவையான முதலீடுகளை இலலாமற் செய்யாது, பன்னாட்டு முறி வழங்கல்களினூடாக தேவைப்பட்ட நிதியங்களை திரட்ட வேண்டும். பொருளாதாரத்தில் தனியார் முதலீட்டைத் தூண்டுவதற்கு உகந்த முதலீட்டுச் சூழல் மற்றும் சிறந்த பேரண்டப் பொருளாதாரச் சூழலைப் பேண வேண்டும். இது தொடர்பாக நெகிழ்ச்சிச்தன்மைமிக்க செலாவணிவீத கொள்கையைப் பேணும் அதேவேளை பணவீக்கத்தை தனி இலக்கத்துக்கு கட்டுப்படுத்தல் முதலீட்டாளர் நம்பகத்தன்மையை அதிகரிக்கும்.

**விசேடமாக வீழ்ச்சியடைந்து செல்லும் தொழிலின்மை வீதத்தைக் கருத்திற் கொள்கையில், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கு தேசிய உற்பத்தித் திறனின் மேம்பாடு அத்தியாவசியமாகிறது.** அண்மைய ஆண்டுகளிலான உயர் பொருளாதார விரிவாக்கம் மற்றும் பொருளாதாரத்தின் சில துறைகளில் தொழிலாளர்களுக்கு காணப்படும் பற்றாக்குறை காரணமாக உயர் கூலிகளுக்கான கேள்வியின் இடர்நேர்வுகள் என்பவற்றைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தொழிலின்மை வீதம் 2006இல் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. எந்தவொரு கணிசமான கூலி அதிகரிப்புக்களும் செலவால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்களை விளைவித்து நாட்டின் வெளிநாட்டுப் போட்டித் தன்மை மோசமடைவதற்கு இட்டுச் செல்கிறது. அதிகரித்துச் செல்லும் கூலிகளின் தாக்கத்தினைத் தணிப்பதற்கும், போட்டித் தன்மையை நீடித்து நிலைத்து வைத்திருப்பதற்கும் பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது முக்கியமாகும். இது தொடர்பாக பொது மக்களுக்கு அறிவூட்டல் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டில் அவர்களின் விழிப்புணர்வை அதிகரித்தல் என்பன மீது சகல பங்குடைமை

யாளர்களாலும் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த முயற்சிகள் பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் தேசிய உற்பத்தித் திறனை மேம்படுத்த உதவும். அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி மீதான அதிகரித்த செலவினம் உற்பத்தியாக்கம் மற்றும் உற்பத்தித்தரம் ஆகியவற்றை மேம்படுத்தி புதுப்புது விடயங்கள், தொழில்நுட்ப உருவாக்கம் மற்றும் செல்வத்தை உருவாக்கல் என்பவற்றூடாக நாட்டின் சுபீட்சத்துக்கு இட்டுச் செல்லும்.

**போட்டி விலைகளில் மின்வலுவின் போதுமான மற்றும் நம்பகத்தக்க வழங்கல் இலக்கிடப்பட்ட பொர்ருளாதார வளர்ச்சியை அடைவதற்கு அத்தியாவசியமாகிறது.** மொ.உ.உற்பத்தியில் 1 சதவீத அதிகரிப்பு மின்வலு வழங்கலில் 1.5 - 2.0 சதவீத வளர்ச்சியை தேவைப்படுத்தும் என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. நீண்டகாலம் தாமதிக்கப்பட்ட பாரிய அளவையுடைய நிலக்கரி மின்வலு மற்றும் நீர்மின்வலுப் பொறிகளை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும், அவை 2010இற்குப் பின்பே மின்வலுவை வழங்கத் தொடங்கும், அவசரமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டமிடப்பட்ட 300 மெவா கெரவலப்பிட்டிய வெப்பமின்வலுப் பொறி 2008இன் இரண்டாம் அரைப் பகுதியிலேயே வலு உருவாக்கத்துக்குக் கிடைக்கக் கூடியதாகவிருக்கும். எனவே, வலு வழங்கலுக்கான எந்தவொரு இடையூறும் மோசமான பொருளாதார மற்றும் சமூகச் சிக்கல்களை கொண்டிருக்குமாதலால் எந்தவொரு வலுப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்கும் அவசியமான முன்னேற்பாட்டு வழிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். முன்பு செய்தது போல் மின்வலுப் பற்றாக்குறைகளை எதிர் கொள்வதற்கு மிகைப்படுத்தப்பட்ட விலையில் அவசரகால வலுவினை பயன்படுத்துவது இலங்கை மின்சபையின் ஏற்கனவே மோசமான நிதியில் நிலைமையை மேலும் மோசமாக்குவதற்கு வழிவகுக்கும். எனவே, நீர்த் தேக்கங்களுக்கு நீரை விடுவிக்கும் வினைத்திறன் மிக்க முகாமை, கிடைக்கத்தக்க வெப்ப மின் இயலளவின் உச்சப்பயன்பாடு தனிப்பட்ட உருவாக்கத் திட்டங்களை மீளச் செயற்படுத்தல், மற்றும் மிக முக்கியமான மின்வலு சேமிப்பு நிகழ்ச்சித் திட்டம் போன்ற அத்தியாவசிய மாற்று வழிமுறைகளையும் எந்தவொரு வலுப் பற்றாக்குறைகளையும் தவிர்ப்பதற்கு விரைவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

**இப்பிராந்தியத்தில் போட்டித்தன்மை வாய்ந்ததாக இருப்பதற்கு முதலீட்டுச் சூழலை மேலும் மேம்படுத்துவதற்கு பல புதிய முன்னெடுப்புக்களை இலங்கை மேற்கொள்ள வேண்டும்.** கூடிய முதலீடுகளை கவர்வதற்கு மனித வள முகாமைத்துவம், வரி மற்றும் வரி நிருவாகம், சட்டமுறைமை மற்றும் பிணக்குகளைத் தீர்த்தல், வியாபாரப் பதிவு, சுங்க நடைமுறைகள் மற்றும் கல்வி போன்ற துறைகளில் பல முன்னெடுப்புக்கள் தேவைப்படுகின்றன. அதேவேளை, பங்குடைமையாளர்களுக்கு சிறந்த வெளிப்படுத்துகை மற்றும் தகவல் பரப்புதலூடாக நிறுவனங்களின் வெளிப்படையான தன்மையை மேம்படுத்துவதன் மூலம் பொதுவான ஆளுகை மட்டங்களை மேம்படுத்தலும் மற்றும் விரயத்தைக் குறைப்பதற்கும் நலன்களை எதிர்பார்ப்பதற்கான வாய்ப்புக்களுக்குமான ஒழுங்குமுறைகளை பூரணப்படுத்தி மேம்படுத்துதலும் முக்கியமானதாகும்.

**நடுத்தர காலத்தில் இலங்கையின் ஏற்றுமதி உபாயம், கூடியளவு பணிகளை நோக்கமாகக் கொண்ட ஏற்றுமதிகளினைப் பன்முகப்படுத்துதல் குறிப்பாக, வேளாண்மை ஏற்றுமதிகளை உள்ளடக்கிய பொருட்களின் ஏற்றுமதிகளில் கூடிய பெறுமதி கூட்டல் என்பவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும்.** அதிகரித்துச் செல்லும் தலைக்குரிய வருமானங்களுடன் குறைந்த வருமானம் உள்ள நாடாக இலங்கையின் ஒப்பீட்டளவான அநுகூலம் விரைவாக வீழ்ச்சியடைந்து வருவதாலும் சிறந்த கல்வி அறிவுடைய தொழிற்படை, பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியின் தொடர்ச்சியான வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகள் மற்றும் நிபுணத்துவப் பணிகள் போன்ற அறிவை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிகளின் மேம்படுத்தலை வேண்டிநிற்கின்றது. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு போன்ற மரபுரீதியிலான வேளாண்மைப் பொருட்களின் வெளியீட்டை மேலும் விரிவாக்குவதில் உள்ள இயற்கைக் கட்டுப்பாடுகள் காரணமாக, நடுத்தர காலத்தில் ஏற்றுமதிகளில் நீடித்தது நிலைத்திருக்கக் கூடிய வளர்ச்சியை எய்துவதற்கு பெறுமதி கூட்டல், வர்த்தக அடையாளமிடல் மற்றும் பயிர்களின் பன்முகப்படுத்தல் என்பன அத்தியாவசியமாகின்றன.

**கடந்த இரு ஆண்டுகளில் அனுமதிப் பங்கற்ற வர்த்தகச் சூழலை வெற்றிகரமாக எதிர்கொண்ட ஆடை ஏற்றுமதிகள் ஐக்கிய அமெரிக்கச் சந்தைகளுக்கான சீனாவின் ஏற்றுமதிகள் மீதான கட்டுப்பாடுகள் 2008இல் நீக்கப்படுவதால், தீவிர போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்,** இலங்கை ஆடைத்தொழில் கைத்தொழில், பொருட்களின் தரத்தை அதிகரித்தல், பன்னாட்டு ரீதியாக தொழில் நியமங்கள் மற்றும் நல்ல ஆளுகைகளுடன் இணங்கிச் செல்லல், உரிய நேரத்தில் வழங்குவதற்கான உத்தரவாதம், போட்டி விலைகளில் வழங்குதல், தொழிற்படையின் தேர்ச்சிகளை மேம்படுத்தல் மற்றும் பிரபல்யமான பன்னாட்டு வாடிக்கையாளர் தளங்களை அபிவிருத்தி செய்தல் ஆகிய அதன் முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இத்துடன், முன்னுரிமைகளுக்கான பொதுவாக்கப்பட்ட முறைமை+ திட்டத்தின் கீழ் ஆடை ஏற்றுமதிகளில் ஆகக் குறைந்தது 50 சதவீத பெறுமதி கூட்டலை இலங்கை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற மூலப் பிரமாணத்தின் தற்போதைய விதிகளில் சில தளர்த்தலை பெறுவதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் மேலும் மேலும் அநுகூலங்களை வழங்கும்.

**முக்கிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்கான நிதியிடலுக்கு அரசு ஏற்கனவே பற்றுறுதி கொண்டிருந்த போதிலும் பொருளாதாரத்தின் தோற்றம் பெற்றுவரும் உட்கட்டமைப்புத் தேவைகள் அரச தனியார் பங்குடைமைகளினூடாக நிதியிடப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.** சலுகை அடிப்படையிலான நிதியிடல் படிப்படியாக வீழ்ச்சியடைந்து செல்வதால் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை நிதியிடுவதில் அரசின் தற்போதைய நடைமுறைகள் தொடர்வது இறைப் பற்றாக்குறைகளை விரிவாக்கி கடன்பாடுகளின் செலவை அதிகரிக்கும், இது வெளிநின்ற அரசபடுகடனை மேலும் அதிகரிப்பதற்கும், மீள் கொடுப்பனவு இயலளவை மோசமான அழுத்தத்தின் கீழ் வைத்திருப்பதன் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளில் சம காலத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தியை தடுப்பதற்கும் இட்டுச் செல்லும். எனவே, நீண்ட காலத்தில் இறையின் நீடித்து நிலைத்திருத்தலைப் பேணுவதற்கு, உட்கட்டமைப்பு முதலீட்டுக்கு உதவுவதற்காக அரச - தனியார் பங்குடைமைகள் சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் ஊக்குவிக்கப்பட வேண்டும். அரச தனியார் பங்குடைமைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள், பங்கிலாபங்கள், வரி அரசிறைகள் மற்றும் மூலதன இலாபங்களூடாக அரச அரசிறையின் எதிர்கால மூலமாகவும் இருக்க முடியும். செயற்றிட்டங்களை முகாமை செய்வதில் தனியார் முதலீட்டாளர்களின் சிறந்த தேர்ச்சிகள், அதிகரித்த வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனுக்கு இட்டுச் சென்று சிறந்த தரம் மற்றும் குறைந்த செலவுகள், மற்றும் அரசின் பங்கு மூலதன இருப்பை அதிகரித்தல் என்பவற்றை ஏற்படுத்தும்.

**பொருளாதாரத்தை தற்போதைய 7 - 8 சதவீதத்திலிருந்து நடுத்தர காலத்தில் 8 - 10 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளிலும் உள்ள பல முக்கிய துறைகளில் அத்தியாவசியமான அமைப்பு ரீதியிலான மேம்பாடுகளை மேற்கொள்வது அவசியமாகும்.** அதிகரித்துச் செல்லும் சூழலில் தோற்றம் பெற்று வரும் சவால்களை, அரசிடமிருந்து உதவுதொகைகள் மற்றும் பாதுகாப்பை தேடிச்செல்லாது, உற்பத்தித்திறன் மேம்பாடுகளூடாக எதிர்கொள்வதற்கு தனியார்துறை தயாராக இருக்கவேண்டும். அடுத்தகட்ட அபிவிருத்திக்கு தேவைப்பட்டவாறு தொழிலாளர் சந்தையின் இயக்கத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தேர்ச்சிகளை வழங்கக் கூடியதாக கல்வித்துறை இருக்கவேண்டும். மனித வள முகாமைத்துவத்திலான மேம்பாடுகள்

கூடிய தொழில் வாய்ப்புக்களை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டிருக்கையில் அவர்களின் தேவைகள் மற்றும் செயற்பாடுகளின் பன்முகப்படுத்தலுடன் இணைந்து செல்லும் வகையில் அவர்களின் தொழிற்பாடுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் தொழில் தருநர்கள் மற்றும் ஊழியர்களுக்காக சில நெகிழ்ச்சித் தன்மைகளை வழங்க வேண்டும். நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தடைகளை நீக்குவதை நோக்காகக் கொண்ட புதிய முகாமைத்துவ நடைமுறைகளின் அமுலாக்கம் தனியார்துறையின் உச்ச உள்ளார்ந்த வளத்தைத் தூண்டுவதற்கு முற்தேவையாக அமைகிறது. நாட்டின் நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 80 சதவீதம் தற்போதும் அரசுக்குச் சொந்தமாக இருந்தபோதிலும், முதலீடுகளுக்கான காணிகளை ஒதுக்கீடு செய்வதற்கு உரிய பொறிமுறை இல்லாமையால் முதலீடுகளுக்கான காணி பற்றாக்குறையாக காணப்படுகிறது. சட்டவாக்க முறைமையூடாக தனியார் காணிகளின் பிணக்குகளைத் தீர்ப்பதில் காணப்படும் தாமதங்கள் மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்படும் கிடைக்கத்தக்கதாகவுள்ள தனியார் காணிகளின் வினைத்திறனற்ற பயன்பாட்டுக்கு அடிக்கடி இட்டுச் செல்கிறது. அதேவேளை, பொருளதாரத்தை தற்போதைய 7 - 8 சதவீத வளர்ச்சியிலிருந்து நடுத்தர காலத்தில் 8 -10 சதவீத வளர்ச்சிக்கு இட்டுச் செல்வதற்கு நவீன பொருளாதாரத் தேவைகளுடன் முரண்படாத, கூடிய வினைத்திறனுள்ள அரசதுறை, அத்தியாவசியமாகிறது.

**பத்து ஆண்டு தொலை நோக்கில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க ஏனைய பல துறைகளில் வளர்ச்சியடைவதற்கான பாரிய உள்ளார்ந்த வளத்தை இலங்கை கொண்டுள்ளது**. நன்கு இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புப் பிரசாரங்களுடன் தேவையான உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்யப்படின், குறுகிய காலப்பகுதியினுள் ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் கூடுதலாக வருமானம் ஈட்டக்கூடிய உள்ளார்ந்த வளத்தை சுற்றுலாக் கைத்தொழில் கொண்டிருக்கின்றது. இப் பிராந்தியத்தில் தற்போது காணப்படும் பிரபல்யமான சுற்றுலா மையங்களைவிட இலங்கை மிகக் கூடிய பன்முகப்படுத்தப்பட்ட சுற்றுலா ஈர்ப்பிடங்களைக் கொண்டிருக்கின்றது. தேயிலைக் கைத்தொழிலில், அதிகரித்த பெறுமதி கூட்டல் மற்றும் தொகை வடிவில் ஏற்றுமதி செய்வதைவிட வர்த்தக அடையாளத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தினால், தேயிலை ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 2 பில்லியன் பெறுமதியுடைய கைத்தொழிலாக மாறுவதற்கான உள்ளார்ந்த வளத்தை கொண்டுள்ளது. தொடர்ச்சியான முன்னேற்றங்களுடான சிறப்பியல்வாக்கம், சிறந்த துணை உற்பத்தி வசதிகள் மற்றும் சந்தைப்படுத்தல் உபாயங்கள் என்பவற்றுடன் இலங்கை ஆடைக் கைத்தொழில் வெகுவிரைவில் ஐ.அ.டொலர் 5 பில்லியன் கைத்தொழிலாக மாறிவிடும். பணவனுப்பல்களை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முயற்சியுடன் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வெளிநாட்டு செலாவணி வருவாய்கள் ஐ.அ.டொலர் 4 பில்லியனை அடையக்கூடும், வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உள்ளார்ந்த வளம் ஐ.அ.டொலர் 4 பில்லியனுக்கும் கூடுதலாக அமையும் என்பதனை ஏற்கனவே காண முடிகிறது. அவ்வாறான இலக்குகளை அடைதல் பத்து ஆண்டு தொலைநோக்கில் வெளிப்படுத்தப்பட்டவற்றைவிட உயர் வளர்ச்சிப் பாதைக்கு எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவாக இலங்கையை முன்கொண்டு செல்லும்.

சிறப்புக் குறிப்பு 3

## பத்தாண்டு கால அபிவிருத்திக் கட்டமைப்பு: 2006 - 2016

2006ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் 2007இற்கான வரவு செலவுத்திட்டத்துடன் வழங்கப்பட்ட பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பானது (பத்து ஆண்டு தொலைநோக்கு) "*மகிந்த சிந்தனைக்கு*" ஒத்திசைவான ஒரு பரந்த கொள்கை கட்டமைப்பாகும். இது நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு மற்றும் அனைத்து அக்கறை கொண்டோர்களுக்கு மிடையிலான ஆலோசனை செய்முறையினூடாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. கட்டமைப்பானது அடுத்த 10 வருடங்களில் உட்கட்டமைப்பு வளர்ச்சியினை மேம்படுத்துவது மற்றும் பிராந்திய பொருளாதார சமமின்மை மற்றும் வறுமையை நிலையான அடிப்படையில் குறைப்பதனை இயலச் செய்கின்ற சூழலை வழங்குவதற்கான அறிவு சார்ந்த துரிதப்படுத்தப்பட்ட பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றை இலக்கிட்ட அரசாங்கத்தின் உபாயக் கொள்கை வழிகாட்டல்களினை வெளிப்படுத்துகின்றது.

பத்தாண்டு அபிவிருத்தி கட்டமைப்பின் கீழான பேரண்டப் பொருளாதார கட்டமைப்பானது அடுத்த ஆறு வருட காலப்பகுதியில் 8 சதவீத பொருளாதார வளர்ச்சியனையும் அதன் பின்னர் சாதகமான அபிவிருத்திகளான படிப்படியாக குறைவடைந்து செல்லும் பணவீக்கம் மற்றும் செயற்றிறன் மேம்பாடுகள் போன்றவற்றுடன் இணைந்த 9-10 சதவீத வளர்ச்சியினையும் இலக்காகக் கொண்டுள்ளது. தனியார்துறையின் மேம்பட்ட சேமிப்புக்கள், வெளிநாட்டு வளங்கள் மற்றும் படிப்படியாக குறைவடைந்து செல்லும் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினூடாக சேமிக்கப்பட்ட நிதிகள் போன்றவற்றினைப் பயன்படுத்தி முதலீடு குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கேள்வித் தூண்டலிலான பணவீக்கத்தினைத் தவிர்க்கும் அதேவேளை நிலைத்து நிற்கும் பொருளாதார செயற்பாடுகளுக்காக தேவைப்படுகின்ற கொடுகடனினை வழங்குவதற்காக நாணயக்கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. விரும்பத்தக்க மட்டத்திலான அலுவல்சார் ஒதுக்குகளினால் ஆதரவளிக்கப்பட்டு மிதக்க விடப்பட்ட நாணயமாற்றுவீத அமைப்பு தொடரப்படும்

பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பின் அடிப்படைக் கூறுகளை பின்வரும் அட்டவணை வழங்குகின்றது.

### அட்டவணை சி 3.1
### பத்தாண்டு கால அபிவிருத்திக் கட்டமைப்பு: 2006 - 2016 துறைவாரியான தொகுப்பு

| துறை மற்றும் அபிவிருத்தி உத்வேகம்/ தொலைநோக்கு/ குறிக்கோள் | கொள்கைக் கட்டமைப்பு/ கொள்கை வழிகாட்டல்/ உபாயங்கள்/ முக்கிய இலக்குகள் |
|---|---|
| **வேளாண்மை:**<br>பாரம்பரிய ஜீவனோபாய வேளாண்மையை வர்த்தகம் சார்ந்த உயர்ந்த உற்பத்தித்திறன் வாய்ந்த துறையாக மாற்றியமைத்தல். | - வேளாண்மைசார் கைத்தொழில்கள் உட்பட உற்பத்தித்திறன் குறைந்த ஜீவனோபாய விவசாயத்தினை உயர்ந்த உற்பத்தித்திறன் வாய்ந்த முன்னேற்றகரமான வேளாண்மையாக மாற்றுதல்<br>- பெருந்தோட்டங்கள் உட்பட ஏற்றுமதி சார்ந்த வேளாண்மைத்துறைகளின் உற்பத்தித்திறன், உற்பத்தி மற்றும் போட்டித்தன்மையை அதிகரித்தல்<br>- கிராமிய வறுமை குறைப்பிற்கு நேரடியாக பங்களிப்புச் செய்கின்றதான ஊழியம், நிலம் மற்றும் ஏனைய உற்பத்திக் காரணிகளுக்கான விளைவினை அதிகரித்தல்<br>- இயந்திரமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களினூடாக வேளாண்மையின் உற்பத்தி வினைத்திறனை உயர்த்துதல்<br>- சந்தையை நோக்கிய விலையிடல் மற்றும் ஊக்குவிப்புச் சூழலினை அபிவிருத்தி செய்தல்<br>- பெருந்தோட்டத்துறை அல்லாத துறையின் உயர்ந்த பங்களிப்புடன் ஒரு விரைவான வீதமான 4 - 5 சதவீதத்தில் வளர்ச்சியடைகின்ற அதேவேளை, துறையில் சிறிய மற்றும் நடுத்தரத் தொழிற்பாடுகளது வர்த்தக நோக்கினை அதிகரித்தல் |
| **நீர்ப்பாசனம்:**<br>நீர் உற்பத்தித்திறனை அதிகரிப்பதனூடாக நீர்ப்பாசன வேளாண்மையினை வர்த்தக ரீதியில் சாத்தியமான தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றகரமான துறையாக மாற்றியமைத்தல். | - நீர்ப்பாசன நீரின் பாவனையில் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் மேம்படுத்தல்<br>- தற்போதுள்ள நீர்ப்பாசன முறைமைகளின் புனரமைப்பிலும் புதிய நீர்ப்பாசன முறைமைகளின் அபிவிருத்தியிலும் முதலீடு செய்தல்<br>- நீர் ஒதுக்கீட்டு முறைகளினை மேம்படுத்துதல்<br>- சிறிய தாங்கிகள்/ சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களது புனரமைப்பு<br>- நிறுவன மறுசீரமைப்பும் இயலளவுக் கட்டமைப்பும் |
| **கைத்தொழில் அபிவிருத்தி:**<br>பரந்தளவான சந்தர்ப்பங்களை வழங்குவதற்காக உயர்ந்த பெறுமதி கூட்டல், உயர்ந்த உற்பத்தித்திறன் மற்றும் நிலைத்து நிற்கும் தொழில்நிலை போன்றவற்றை உருவாக்குவதற்கான ஆற்றலும் மற்றும் போட்டித்தன்மையும் வாய்ந்த உற்பத்திக் கைத்தொழில் நிறுவனங்களிற்கானதொரு அடிப்படை. | - கைத்தொழில் தீர்வுகளினை முகாமை செய்வதற்கு தேசிய இயலளவை அபிவிருத்தி செய்தல்<br>- கைத்தொழில்களின் போட்டித்தன்மையை உயர்த்துவதற்கும் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்குமான தேசிய புதிய முறைமையினை வலுப்படுத்துதல்<br>- நுண்பாக தொழில் முயற்சிகளை மேம்படுத்தல்<br>- கைத்தொழில்களுக்கு போட்டித்தன்மை அநுகூலங்களை உருவாக்குவதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்<br>- புவியியல்சார் கைத்தொழில் கொத்தணிகளையும் கைத்தொழில் ஏற்றுமதிகளினையும் தரமுயர்த்துதல்<br>- வெளிநாட்டு நேரடி முதலீடுகளை மேம்படுத்துதலும் கைத்தொழில் உதவிகளைப் பயன்படுத்திக் கொள்வதும் |

| | |
|---|---|
| **வலுவும் சக்தியும்:**<br>சுதந்திரமான ஒழுங்குபடுத்தலுக்குட்பட்டு வர்த்தக ரீதியில் சாத்தியமான நிறுவனங்களினூடாக முழுமொத்த குடித்தொகைக்கும் போட்டி அடிப்படையிலான விலையில் சக்தியினைக் கிடைக்கச் செய்வதற்கும் பயன்படுத்து வதற்குமான சக்தி மூலங்கள், பரிமாற்றல் வசதிகள் மற்றும் விநியோக முறைகள் போன்றவற்றின் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி | - மின்வலுவின் பாரம்பரிய மூலங்கள் மற்றும் பாரம்பரியமற்ற மீளப்புதுப்பிக்கக்கூடிய சக்திகள் இரண்டிலும் முதலீடு செய்வதனூடாக எரிபொருள் வேறுபாட்டினையும் பாதுகாப்பினையும் அதிகரித்தல்.<br>- 2016இல் 95சதவீத வீட்டுடமையாளருக்கான மின்வலு கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதற்காக மின்தொகுதிக்கும் மற்றும் மின் தொகுதிக்கு வெளியிலுமான முறைமைகளில் முதலீடு செய்தல்<br>- செலவுப் பயனுறுதி வாய்ந்த கட்டணங்களையும் வெளிச்ச மூட்டலுக்கான சக்திப் பாவனைக்கான பொதுவான உதவு தொகையையும் அறிமுகப்படுத்தலும் சுமையினைக் குறைப்பதற்காக துறையின் கடன்களை மீள்கட்டமைத்தலும்<br>- எண்ணெய்/ எண்ணெயுடன் தொடர்புடைய எரிபொருள் எரிக்கும் வலு இயந்திரங்கள் மீதான சலுகை வழங்கவதனுடாகவும் நிலக்கரி மற்றும் பாரம்பரியமற்ற மீளப் புதுப்பிக்கக்கூடிய வலுவிற்கு பன்முகப்படுத்துவதனூடாகவும் பாரிய வலு உருவாக்கலில் எரிபொருள் வேறுபாட்டினையும் சக்திப் பாதுகாப்பினையும் மேம்படுத்தலும்.<br>- வலையமைப்பிலான தடைகளை விடுவித்தலும் பாரம்பரியமற்ற மீளப்புதுப்பிக்கக்கூடிய சக்தியின் அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்கான நிதிகளை ஒழுங்குபடுத்தலும்<br>- வழங்கலின் பாதுகாப்பு, தரம் மற்றும் நம்பிக்கைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக பரிமாற்றம் மற்றும் விநியோகம் போன்றவற்றில் முதலீடு செய்தல்<br>- பொதுமக்களுக்கு நன்மையை வழங்குவதற்காக புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட எண்ணெய் இருப்புக்களினை அகழ்தல்<br>- தேசிய மின்தொகுதிக்கான தடைகளை நீக்குதல் மற்றும் பாரம்பரிய மற்ற மீளப் புதுப்பிக்கக்கூடிய சக்தியை அபிவிருத்தி செய்தல் |
| **தொலைத் தொடர்புகள்:**<br>அனைத்து மக்களுக்கும் ஒரு நியாயமான செலவில் இலகுவாகக் கிடைக்கக்கூடியதான ஒரு நவீன தொலைத்தொடர்பு வலையமைப்பு | - துறையில் போட்டித்தன்மையைப் பேணுவதற்கான ஒரே விதமான வாய்ப்புக்களை<br>- ஊக்குவித்தல்<br>- மனிதவள அபிவிருத்தியை மேம்படுத்தல்<br>- செயற்பரப்பினை அது வினைத்திறனாகவும், குறைந்த செலவிலும், உச்சமாகவும் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக முகாமை செய்தல் |
| **நீர் வழங்கலும் சுகாதாரமும்:**<br>அனைத்து பொதுமக்களுக்கும் பாதுகாப்பான குடிநீரையும் சுகாதாரத்தினையும் கட்டுப்பாடின்றி வழங்குதல் | - மாற்று நிதி மூலங்களினை மேம்படுத்துவதன் மூலம் அரச முதலீட்டில் தங்கியிருத்தலை படிப்படியாகக் குறைத்தல்<br>- தாழ்ந்த வருமான சமூகத்தினருக்கு மாத்திரமான உதவுதொகையுடன் குழாய் நீருக்கான செலவினை அளவிடும் விதத்தில் கட்டணங்களை அறிமுகம் செய்தல்<br>- ஒழுங்குபடுத்தல் மற்றும் நிறுவனக் கட்டமைப்பினை நிறுவுதல்<br>- கேள்வி முகாமைக் கொள்கைகளினை நிறைவேற்றுதல்<br>- பொருத்தமான கிராமிய மற்றும் நகர நீர் வழங்கல் முகாமை உபாயங்களை அறிமுகம் செய்தல் |
| **வீதிகள்:**<br>நாட்டின் அனைத்து குடித்தொகைக்கும் கிடைப்பனவை வழங்குதலும் பயணிகள் மற்றும் பொருட்களை போக்குவரத்து செய்வதற்கான உயர்ந்த தரமானதொரு வீதி வலையமைப்பினை உருவாக்குதல் | - தற்போதுள்ள வீதி வலையமைப்பினை பராமரிப்பதற்கும் புனரமைப்பதற்கும் அதிக முன்னுரிமை வழங்குதல்<br>- கவனமாக தெரிவு செய்யப்பட்டதும் செலவுச் சிக்கனத்துடன் பராமரிக்கக்கூடியதுமான புதிய முக்கிய வீதிகளையும் கடுகதி வழிகளினையும் நிர்மாணித்தல்<br>- போக்குவரத்து முகாமைக்கும் வீதிப்பாதுகாப்பை அதிகரிப்பதற்குமானதொரு நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகம் செய்தல்<br>- கிராமிய வீதி வலைமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கு, வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்து செய்தலும்<br>- வீதிக்கு விலையிடல, மேம்பாலங்களை நிர்மாணித்தல் மற்றும் அடையாள விளக்குகளை நிறுவுதல் போன்ற போக்குவரத்து முகாமை வழிமுறைகளை அறிமுகம் செய்தல்.<br>- கடுகதி வழிகளை அபிவிருத்தி செய்வதற்கு அரச, தனியார் பங்குடமை முதலீட்டு<br>- சந்தர்ப்பங்களினை திறந்து வைத்தல் |
| **போக்குவரத்துப் பணிகள்:**<br>தாங்கிக் கொள்ளக்கூடிய செலவில் வினைத்திறன்மிக்கதும் பாதுகாப்பானதுமான போக்குவரத்து முறைகளுக்கான ஏற்பாடுகளும் சமூக பொருளாதார அபிவிருத்தியின் தேவைகளுக்கான பதிலிறுப்பும் | *பொதுவான போக்குவரத்துக் கொள்கையின் முக்கிய பண்புக்கள்:*<br>- போக்குவரத்துக் கட்டணங்களை அத்தகைய பணிகளை வழங்குவதற்கான செலவுடன் தொடர்புபடுத்தல்<br>- பொருளாதார மற்றும் சமூக அடிப்படையில் மாத்திரம் அரச உதவதொகைகளை வழங்குதல்<br>- குறுக்கு உதவுதொகையை தவிர்த்தல்<br>*புகையிரதப் போக்குவரத்து: குறைந்த பிரயாண நேரம்*<br>தற்பொழுது பயணிகளுக்கு வழங்கப்படும் பணிகளை மேம்படுத்துதல் |

| | |
|---|---|
| | - நிதியியல் நிலைப்பாடுகளை மேம்படுத்துதல்<br>- புதிய புகையிரதப் பாதைகளை நிர்மாணித்தல், தெரிவு செய்யப்பட்ட பாதைகளை விரிவுபடுத்துதல், புதிய தொழிநுட்பத்தினையும் மின்வலுமயமாக்கப்பட்ட புகையிரதப் பணிகளையும் அறிமுகப்படுத்தல் மற்றும் புகைவண்டி ஊடாக கொள்கலன் போக்குவரத்துக்கு வசதியளித்தல் போன்றவற்றினூடாக நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் புகையிரத முறைமையினை மேம்படுத்துதல்<br>*பேரூந்து போக்குவரத்து: சௌகரியமானதும் பாதுகாப்பானதுமான பிரயாணம்*<br>- ஒரு புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக தற்போதுள்ள மூலதனச் சொத்துக்களை மேம்படுத்துதல்<br>- புதிய பேரூந்துக்களை இணைத்தல், இணைந்த புகைவண்டி மற்றும் பேரூந்துப் பணிகளை வழங்குதல், பொதுவான ஒழுங்குபடுத்தல் செய்முறையை அபிவிருத்தி செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் பிராந்திய சபைகளை<br>- ஊக்குவித்தல் போன்றவற்றினால் அரச பேரூந்துப் பணிகளினை வலுப்படுத்தல். |
| **துறைமுகங்கள்:**<br>இலங்கையின் தெற்காசியாவின் முதன்மை கப்பற் போக்குவரத்து, வியாபார மற்றும் வர்த்தக நிலையமாக அபிவிருத்தி செய்தல் | - பன்னாட்டு வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக நாட்டின் முக்கிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்<br>- தெற்குத் துறைமுகம், காலி மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களை நிர்மாணிப்பதன் மூலமும் தெரிவு செய்யப்பட்ட மாகாணங்களில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமும் கொழும்பு சர்வதேச துறைமுகத்தின் போக்குவரத்து நெரிசலினைக் குறைத்தல்<br>- துறைமுகங்களது இயலளவு, வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன்களது மேம்பாட்டினை ஊக்குவிக்கின்ற அதேவேளை தற்போதுள்ள துறைமுகங்களின் அரச உடமையை தொடர்ந்து வைத்திருத்தல்<br>- வர்த்தக ஸ்தாபனங்களாக தொழிற்படுவதற்காக துறைமுகங்களின் அதிகரித்துச் செல்லும் தொழிற்பாட்டுச் செலவினை முகாமை செய்தல்<br>- இறங்குதுறைக்கு வெளியே கொள்கலன் சாலைகளை அரச தனியார் பங்குடமைகளினூடாக நிறுவுதல் |
| **விமானப் போக்குவரத்து:**<br>சர்வதேச தரத்திற்கமைவாக காப்பமைப்பு மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்துகின்றவாறான போட்டித்தன்மையுடைய சிவில் வான் போக்குவரத்துச் சூழலைப் பேணுதலும் வினைத்திறனான போக்குவரத்தின் செலவுச் சிக்கனமான ஒருங்கமைப்புடன் கூடிய வளர்ச்சியினை மேம்படுத்துதலும் | - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு, காப்பமைப்பு மற்றும் பாதுகாப்பு போன்றவற்றை மேம்படுத்துவதற்கான அரச முதலீட்டில் கவனம் செலுத்துதல்.<br>- வீரவிலவில் இரண்டாவது சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணித்தல்<br>- தனியார்துறை ஈடுபாட்டினை தளம் சார்ந்த பணிகளினை வழங்குவதுடன் மட்டுப்படுத்துதல்<br>- கேள்விக்கேற்ப சர்வதேச தரத்திலான போதுமான விமான நிலைய உட்கட்டமைப்பு இயலளவை வழங்குதல்<br>- திறந்த ஆகாயத்திற்கான இருபுடை உடன்படிக்கைகளினைச் செய்து கொள்வதன் மூலம் இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்குமான இணைப்பினை மேம்படுத்துதல்<br>- சர்வதேச வான் பணிகளுக்காக பல்லின உள்நாட்டு விமானங்களை ஊக்குவித்தல்<br>- புதிய விமான நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கும் தற்பொழுதுள்ள விமான நிலையங்களை மேம்படுத்துவதற்கும் அரச தனியார் பங்குடமையினை மேம்படுத்துதல் |
| **அஞ்சல்:**<br>சிறந்த தரத்திலான பணிகள், வாடிக்கையாளர் தேவைகளுக்கான உயர்ந்தளவான உதவி யளிக்கும் தன்மை, நிதி ரீதியாக நிலைத்து நிற்கும் தன்மை மற்றும் தபால் உட்கட்டமைப்பின் உச்ச பயன்பாட்டினை உறுதிப்படுத்துதல் | - கிடைப்பனவை அதிகரித்தலும் ஒவ்வொரு "ஜனசபா" செயலகங்களூடாகவும் தபால் பணிகளை வழங்குதல் மற்றும் பல்வேறு பணிகளை வழங்குவதன் மூலம் ஏனைய வருவாய் மூலங்களில் கவனம் லெுத்துதலும்<br>- முக்கிய முகாமை ஆதரவு முறைமைகளை ஒழுங்குமுறைப்படுத்தவதனூடகவும் தீர்வை முறையினை சிக்கனப்படுத்துவதனூடாகவும் நிதிப் பற்றாக்குறையை குறைத்தல்<br>- தபால் திணைக்களத்திற்கான வியாபாரத்திட்டத்தினைத் தயாரித்தலும் 2007 இலிருந்து அதனை நிறைவேற்றுதலும்<br>- குறைவடைந்து செல்லும் சந்தைப் பங்கினை சமாளிப்பதற்காக வேறுபட்ட சந்தை உபாயங்களைப் பின்பற்றுதல் |
| **சுற்றுலாப் பயணம்:**<br>தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கையை அதிசிறந்த பொழுதுபோக்கு இடமாக மாற்றுதல் | - இலங்கையினை சுற்றுலாப் பயணக் கைத்தொழிலின் பிராந்திய மத்திய நிலையமாகவும் பிராந்தியத்தில் "நலம் பேண் சுற்றுலா" அமைவிடமாகவும் மேம்படுத்துதல்<br>- சர்வதேச மற்றும் உள்நாட்டு உல்லாசப் பயணிகளுக்காக அதிகரித்த செயற்பாடுகள் மற்றும் விசேட சலுகைகள் கொண்ட உல்லாசப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல்<br>விரைவாக வளர்ந்து வரும் முக்கிய சந்தைகளில் இலங்கையினை தீவிரமாக விருத்தி<br>- செய்வதற்கான உறுதியான சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரக் கொள்கைகளைப் பின்பற்றுதல் |

| | |
|---|---|
| | - 2015இல் இலக்கிடப்பட்ட அறைகளின் இயலளவான 30,000 என்பதனை அடைவதற்கான சிறந்த உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் |
| **நகர அபிவிருத்தியும் மக்கள் குடியேற்றங்களும்:**<br>எல்லா பிரசைகளதும் வாழ்வு சௌகரியமாகவும் நாகரீகமாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதனை உறுதிப்படுத்துகின்ற முறைசார்ந்த நகர மயமாக்கல் செய்முறை | - கொழும்பினையும் அதன் சூழலையும் சர்வதேச தரத்திற்கு அபிவிருத்தி செய்தலும் நவீனமயப்படுத்துதலும் மற்றும் கொழும்பு நகரத்திலுள்ள வசதி குறைந்த குடியிருப்புக்களை மேம்படுத்துதலும்<br>- பிராந்திய வளர்ச்சி செய்முறையினை செயற்படுவதற்கு வழி செய்வதற்கான பொருத்தமான கருப்பொருளில் பிராந்திய நகரங்களை அபிவிருத்தி செய்தல்<br>- நாட்டில் புவியியல் ரீதியாக சமநிலையிலான அபிவிருத்தியை 'உறுதிப்படுத்துவதற்கு நாடளாவிய மட்டத்தில் வளர்ச்சி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்<br>- இரண்டாம் மற்றும் மூன்றாம்தர நகரங்களாக நாடு முழுவதும் சிறிய மற்றும் நடுத்தர நகரமயமாக்கலை அபிவிருத்தி செய்தல்<br>- தேசிய மற்றும் பிராந்திய மட்டத்தில் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்புக்களை உருவாக்குதல்/ மேம்படுத்தல் |
| **ஜீவனோபாய அபிவிருத்தியும் சமூகப் பாதுகாப்பும்:**<br>பொதுமக்கள் தமது ஜீவனோபாயங்களை அபிவிருத்தி செய்வதற்கும் தக்க வைத்துக் கொள்வதற்கும் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கின்ற ஒரு நாடு | - வறியவர்களுக்கு நிலையான வருமான வழிகளினை வழங்குவதற்கான ஜீவனோபாய அபிவிருத்தியில் கவனம் செலுத்துதல்<br>- நிதி, தொழிநுட்ப ஆற்றல், மேம்பட்ட உட்கட்டமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குவதனூடாக வறியவர்களுக்கு ஜீவனோபாயத்தை அபிவிருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்களுக்கான ஆதரவான சூழலை உருவாக்குதல்<br>- அபிவிருத்தியிலான கடுமையான பிராந்திய வேறுபாடுகளையும் வறுமையையும் தீர்ப்பதற்காக வறிய கிராமிய பிரதேசங்களில் மேம்பட்ட இணைப்புக்களுடன் விசேட வறுமைக் குறைப்பு செயற்றிட்டங்களிலும் நிகழ்ச்சித்திட்டங்களிலும் முதலீடு செய்தல்<br>- "கிராமிய அபிவிருத்தி" நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்து நடாத்துதல்<br>- ஜீவனோபாய அபிவிருத்திக்கும் வறுமை ஒழிப்பிற்குமான பயனுறுதி வாய்ந்த கருவியாக நுண்பாக நிதியிடலை பயன்படுத்துதல்<br>- நேரடி பணக் கொடைகளது கொடுப்பனவுகளூடாக பொருளாதார மற்றும் சமூக ரீதியாக<br>- பின் தங்கிய மக்களினை இலக்கிட்டு நிவாரண உதவிகளை தொடர்ந்து செல்லல் |
| **கல்வி:**<br>விரைவான பொருளாதார வளர்ச்சிக்கும் தேசிய அபிவிருத்திக்கும் வேண்டப்படும் தொழிநுட்ப ஆற்றல்களை மேம்படுத்துகின்ற ஒன்றாக கல்வித்துறையினை மாற்றியமைத்தல் | *பொதுக்கல்வி*<br>- அனைத்து சிறுவர்களுக்குமான இலவசக் கல்வியினை பாதுகாக்கும் அதேவேளை ஒவ்வொரு நபருக்கும் தனது திறமைக்கும் முன்னுரிமைக்கேற்ப தரமான கல்வியை பெற்றுக் கொள்வதற்கு பரந்தளவிலான சாத்தியமான சந்தர்ப்பங்களை வழங்குதல்.<br>- அடிப்படை மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியில் கிடைப்பனவு, பங்குபற்றல், சாதனை மற்றும் பெறுபேறு போன்றவற்றிலான சமமான சந்தர்ப்பங்களை மேம்படுத்தலும் தரத்தினை மேம்படுத்துதலும்,<br>- ஆளுகை, வினைத்திறன் மற்றும் பணி விநியோகத்தினை வலுப்படுத்துதல்<br>*தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி*<br>- நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தையும் பொருத்தப்பாட்டினையும் மேம்படுத்துதல்<br>- இரண்டாம் நிலை பாடசாலைகளிலிருந்தும் தொழிற்படையிலிருந்தும் தொழிநுட்ப மற்றும் தொழில்சார் நிறுவனங்களுக்கான பிரவேசங்களை அதிகரித்தல்<br>- தொழிநுட்ப மற்றும் தொழில்சார் கல்வி நிறுவனங்களின் தொழிற்பாட்டு மற்றும் முகாமைத்துவ வினைத்திறனை மேம்படுத்தல்<br>*உயர்கல்வி*<br>- அரச பல்கலைக்கழக முறைமையினை நீண்ட காலத்தில் பல்கலைக்கழகக் கல்வியினை வழங்கும் முன்னணி நிறுவன முறைமையாக வைத்திருத்தல். பட்டப்படிப்பு வழங்கும் நிறுவனங்கள் மற்றும் அரச சார்பல்லாத பல்கலைக்கழகங்களினை அரச சட்டங்களின் மேற்பார்வையின் கீழ் அரச பல்கலைக்கழகங்களுடன் இணைந்து சமாந்தரமாக தொழிற்படுவதற்கு அனுமதிளித்தல்.<br>- அரசாங்கத்தினை உயர்கல்வி முக்கிய வழங்குனராக தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு பல்வேறு நிதியிடல் மூலங்களினை ஊக்கப்படுத்துதல், பல்கலைக்கழகங்கள் ஆய்வுகூட மற்றும் பரிசோதனை வளங்களது மேம்பாடு, விசேட கல்வித்துறைகளிலான நிபுணர்களைக் கவருதல், தேசிய முன்னுரிமையடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட துறைகளிலான ஆராய்ச்சி மற்றும் நிபுணத்துவ இயலளவு போன்ற வழிகளில் நவீனமயப்படுத்தப்படும்.<br>- தேசிய அபிவிருத்திக்கான முன்னுரிமை வாய்ந்த துறைகளில் பல்கலைக்கழகங்கள் விசேடத்துவம் பெறுவதையும் பிராந்தியத்தின் மாண்புமிக்க நிலையங்களாக அவை உருவாவதையும் ஊக்குவித்தல். நாட்டின் பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளுக்கு |

| | |
|---|---|
| | நேரடியான மனித வளத்தினை வழங்குவதற்கு ஆதரவளிப்பதற்காக ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட விசேட பல்கலைக்கழகங்களினை அரசாங்கம் நிறுவலாம்.<br>- மனித வளங்கள் மற்றும் அறிவிற்கான பூர்த்தி செய்யப்படாத கேள்வியினை பூர்த்தி செய்வதற்காக புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்யும் அதேவேளை மாற்றமடையும் தொழில்நிலைக்கான சந்தர்ப்பங்களிற்கேற்ப தமது தற்போதுள்ள பாடத்திட்டத்தினை மறுசீரமைப்பதற்கு பல்கலைக்கழகங்களை ஊக்குவித்தல் |
| **நலம்:**<br>தாழ்ந்த வருமானக் குழுக்களினதும் சமூகத்திலுள்ள, அதிகளவில் பாதிக்கப்படக்கூடிய வர்களதும் தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி அனைவருக்கும் தரமானதும் நவீனமானதுமான சுகாதாரப் பணிகளினைக் கிடைக்கச் செய்வதனூடாக சுகாதாரத்திலான சமத்துவத்தினை உறுதிப்படுத்தல் | - சுகாதார மேம்பாடு, தொற்று நோய்கள் மற்றும் தொற்றாத நோய்கள் இரண்டினையும் தடுத்தலும் கட்டுப்படுத்தலும்<br>- சமுதாயத்தில் கீழ் மட்டத்திலுள்ள, வசதிகள் குறைந்த மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களது தேவைகளைப் பூர்ததி செய்தல்<br>- சுகாதாரப் பணிகளை வழங்குவதில் தனியார் முதலீட்டினை ஊக்குவித்தல்<br>மனித வளங்களது அபிவிருத்தி<br>- தற்போதுள்ள பணிகளிலுள்ள இடைவெளியினை நிரப்புவதற்காக தரத்தினையும் வீச்சினையும் வலுப்படுத்தல்<br>- சுகாதாரப் பணிகளின் விநியோக முறைமையிலுள்ள பிராந்திய வேறுபாடுகளைக் குறைத்தல்<br>வினைத்திறன், பயனுறுதித்தன்மை மற்றும் பொறுப்புக்கடனும் கடப்பாடு போன்றவற்றை மேம்படுத்துவதற்காக நிறுவனக்கட்டமைப்பு மற்றும் முகாமையை மறுசீரமைத்தல்<br>- சுகாதார வளங்கள் உச்சமாகப் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தல் |
| **தொழில் நிலை:**<br>சுதந்திரம், சமத்துவம், பாதுகாப்பு மற்றும் மனித கௌரவம் போன்ற நிலைப்பாடுகளில் உற்பத்தித்திறன் வாய்ந்த வேலையை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை மேம் படுத்துவதனூடாக இலங்கையர்கள் வறுமை மற்றும் இழப்புக்கள் அல்லாத சிறந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவிப்பதற்கான சமாதானமும் அபிவிருத்தியும் வாய்ந்த ஒரு எதிர்காலம் | - தொழில்நிலையை உருவாக்குதல்: முறைசார துறையிலான தொழில்நிலையில் கவனம் செலுத்துதல், கீழ் உழைப்பை குறைத்தல், தனியார் துறையினை தொழில் நிலையான ஒரு மூலமாக மேம்படுத்துதல், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் புலம் பெயரும் தொழிலாளர்களை முகாமைப்படுத்தல்<br>- திறமைகளையும் ஊழியர் உற்பத்தித்திறனையும் அபிவிருத்தி செய்தல்: ஊழியத்திற்கான கேள்வியினையும் நிரம்பலினையும் பொருந்தச் செய்தல், ஊழியச் சந்தையின் தகவல் முறைமையை நிறுவுதல், தொழிற்படையின் போட்டித்தன்மையையும் உற்பத்தித்திறனையும் அதிகரித்தல், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இளைஞர் தொழில் நிலையிலான சவால்களினை உணர்ந்து கொள்ளல்<br>- தொழிற்சட்டங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல்களின் நெகிழ்ச்சியினை அதிகரித்தல்: சமூகப் பாதுகாப்பினை முறைசாராத் துறைக்கும் விரிவுபடுத்துதல், தொழில்நிலை நெகிழ்ச்சித்தன்மையை அதிகரித்தல், தொழிலற்றோருக்கு சமூகப் பாதுகாப்பை வழங்குதல், முதுமையடைதலின் தொழிற்படையிலான தாக்கத்தில் கவனம் செலுத்துதல், சிறுவர் உழைப்பை கட்டுப்படுத்துதல்<br>- தொழில்தருநர் தொழிலாளர்களுக்கிடையிலான உறவை அதிகரித்தல்: தொழில் உறவுகளை மேம்படுத்தல், தேசிய மட்டத்திலான மூன்றுதரப்பு கலந்தாலோசனைக்கு<br>- முன்னுரிமையளித்தல் |
| **விஞ்ஞானமும் தொழிநுட்பமும்:**<br>2017இல் இலங்கை அறிவு மற்றும் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட புதிதாக அபிவிருத்தியடைந்த நாடாக விளங்கும்.<br>**சூழல்:**<br>இயற்கையுடன் இணைந்த ஒரு நிலப்பரப்பு | - நாட்டின் ஒவ்வொரு பிரசையையும் பயனுறுதியுடன் அடையக்கூடிய தேசிய விஞ்ஞானக் கலாச்சாரத்தை வளர்த்தல்<br>- நாட்டின் அபிவிருத்தித் தேவைகளுக்கு பதிலிறுப்பதற்காக விஞ்ஞானிகள் மற்றும் தொழிநுட்பவியலாளர்களது வளத் திரட்டினை கட்டியமைத்து தக்க வைத்துக் கொள்வதுடன் முன்னேற்றகரமாக அதிகரித்தலும்<br>- எல்லாப் பொருத்தமான துறைகளிலும் விஞ்ஞான மற்றும் தொழிநுட்பச் செயற்பாடுகளை வளர்த்தல்<br>- விஞ்ஞானத்தினதும் தொழிநுட்பத்தினதும் அடிப்படை மற்றும் பிரயோக விடயங்களிலான ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்<br>- சுதேச, உள்ளூர் அறிவு மற்றும் தொழிநுட்பங்களது பாவனையை ஊக்குவித்தலும் மேலும் அபிவிருத்தி செய்தலும்<br>- விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் சார்ந்த புத்துருவாக்கங்களையும் கண்டு பிடிப்புக்களையும் ஊக்குவித்து வெகுமதியளித்தல்<br>- இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையில் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப ரீதியிலான ஒத்துழைப்பினை ஊக்குவித்தலும் வலுப்படுத்தலும்<br>- அனைத்து வளப்பாவனையாளர்களுடனான பங்குடமையை அபிவருத்தி செய்தல்<br>- அரச நிலங்களின் நிலையான நிலப்பயன்பாட்டை மேம்படுத்தல்<br>- தனியார் வனங்களையும் மர வளங்களையும் அபிவிருத்தி செய்தல் |

| | |
|---|---|
| | - வன உற்பத்திகளையும், கைத்தொழில்களையும் சந்தைப்படுத்தலையும் அபிவிருத்தி செய்தல்<br>- நிறுவன அபிவிருத்திக்கும் துறைகளுக்கிடையான இணைப்பிற்கும் ஆதரவளித்தல் |
| **அரச நிருவாகத்தின் மறுசீரமைப்பு:**<br>பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதிலும் சமூக நீதி மற்றும் சமூகப் பொருளாதார உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்து வதிலும் ஆதரவளிக்கின்றதான ஒரு உற்பத்தித்திறன் வாய்ந்ததும், வினைத் திறனானதும் வாடிக்கையாளர் சிநேக பூர்வமானதும் வெளிப்படையானதும் மற்றும் பொறுப்புக் கடனும் கடப்பாட்டை கொண்டதுமான அரச பணியினை உருவாக்குதல் | - ஒரு கூட்டான அரசாங்கத்தினைப் பெற்றுக் கொள்ளல்: தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி போன்ற மூன்று மட்டங்களிலான ஆளுகைகளின் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்களை தெளிவான நிர்ணயம் செய்யும் அதேவேளை ஆளுகை மட்டங்களிடையே பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் ஒன்றுக்கொன்று முரணாக அமைவதை தவிர்த்தல்<br>- ஒப்பந்த முகாமைத் திறமைகள், செயற்றிறன் அளவீட்டு நுட்பங்கள், உபாயத்திட்டமிடல் திறமைகள் மற்றும் பிரசைகளது கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் போன்றவற்றிலான மேம்பாடுகளுடனான அரச பணிகளின் கூட்டான விநியோகம்<br>- வினைத்திறனான அரச நிதியியல் முகாமைத்துவம்: இறை ஒழுக்கப்பாடு, உபாய ஒதுக்கீடு மற்றும் சிறந்த தொழிற்பாட்டு முகாமை<br>- வினைத்திறனான அரச பணியினை உருவாக்குதல்<br>- அரச துறை செயற்றிறனை முகாமை செய்தல்<br>- நிருவக முறைமையை மறுசீரமைத்தல்: அனைத்தையுமுள்ளடக்கிய மறுசீரமைப்பு, துறை ரீதியான மறு சீரமைப்பு மற்றும் விசேட மறுசீரமைப்பு |
| **போரினால் பாதிக்கப்பட்ட பிரசேங்களின் அபிவிருத்தி:**<br>சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திகளை விரைந்து மேற்கொள்வதன் மூலமாக பொதுமக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கும் தமது தெரிவிற்கேற்ப ஜீவனோபாயத்தை தொடருவ தற்கும் சமாதானமும் இன ஒற்றுமையும் நிலவுகின்றதுமாக வடக்கு மற்றும் கிழக்கினை அனுசரணையானதும் கவர்ச்சிகரமானதுமான பிரதேசமாக அபிருத்தி செய்தல் | - ஜீவனோபாயங்களை மீளவமைத்தல்<br>- பணிகளையும் வசதிகளையும் மீளச் செயற்படுத்துதல்<br>- உட்கட்டமைப்பு வசதிகளை புனரமைப்புச் செய்தல்<br>- மனித இயலளவை அபிவிருத்தி செய்தல்<br>- பாதிக்கப்படக்கூடிய குழுக்களை இலக்கிடுதல்<br>- சிறந்த ஆளுகையை, நிறுவுதல் |